

# ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன் கோவில் சரிதம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 JAN 1952
MADRAS



1301

ஸ்ரீ வாழைத்தோட்டத்து
...ம்

சாமளாபுரம் போஸ்டு
சோமனூர் மார்க்கம்
கோயமுத்தூர் ஜில்லா

...லை: அணா 0—8—0

Q23:38·2118·V
N51
113983

# ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோவில் சரிதம்

OFFICE OF THE REGISTRAR
25 JAN 952
MADRAS

தொகுத்தவர்

வித்வான் சி. கு. நாராயணசாமி முதலியார்

தேவஸ்தான வெளியீடு

உரிமை பெற்றது] 1951 [விலை அணா 0—8—0

823.38.2115N
N51

3983

# பதிப்புரை

சென்னை இந்துமத தர்மபரிபாலன கழகத்தாரவர்கள் தங்களுடைய மேற்பார்வையிலுள்ள சிவாலய-விஷ்ணுவாலயங்களை முன்னேற்றிச் சிறப்படையச் செய்வதன் நிமித்தமும், வெளியூர்களிலிருந்து சுவாமி தரிசனத்தின் பொருட்டு, யாத்திரையாக ஆலயத்திற்கு வரும் அன்பர்களின் நன்மையைக் கருதியும், மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியன தெளிவாக விளங்கும் சிறிய நூல்கள் அச்சியற்றி வெளியிடுமாறு விடுத்த சுற்றறிக்கையைத் தழுவியும், ஷை கழகத்தின் தலைவரான ஸ்ரீமான் **T. M. சின்னையா பிள்ளை அவர்கள்** 25-3-'47-ந் தேதி ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன் ஆலயத்திற்கு விஜயம் செய்தபோது, அய்யன் கோவிலைப் பற்றிய வரலாற்றை அச்சியற்றவேண்டுமென்று விரும்பிக் கூறியதை யொட்டியுமே இவ் "**வாழைத்தோட்டத்து அய்யன் கோவில் வரலாறு**" அச்சிடப் பெற்றது.

இவ்வரலாற்றை **திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்** எங்கள் விருப்பத்திற்கேற்ப விரைவில் எழுதிக் கொடுத்துதவினர்.

வாழைத்தோட்டத்து அய்யன் கோவில் அய்யன்பாளையம் } S. D. வெங்கட்டராம நாயுடு,
நிர்வாக அதிகாரி.

# முன்னுரை

உலகின்கண் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் "ஞானமும் கல்வியும் நயந்து, தானமும் தவமும் தான் செய்வாராயின், வானவர் நாடு வழி திறக்கும்" என்பது ஆன்றோர் அமுதமொழி. அம் முதுமொழியை உறுதி யாகக் கடைப்பிடித்து ஒழுகிக் கயிலாயம் அடைந்தவர், கொங்கு நாட்டி லுள்ள அய்யன்பாளையத்து மேழிச் செல்வராகிய சிவஸ்ரீ சின்னையன் அவர்களேயாவர். ஆன்ற ஒழுக்கமும் சான்றாண்மையும் நிரம்பிய அம்மேலோர் பூதவுடம்புடனிருந்து மக்களுக்குச் செய்த மகத்தான பேருதவியே யன்றி, புகழுடம்பு பெற்றுச் செய்துவரும் பேருபகாரத்தை யும் விவரிப்பதெனின் அது ஏட்டில் அடங்காது விரியும் சிறப்புடையது. பரோபகாரம் செய்வதே பிறவியெடுத்ததின் பயன் என்பதை நன்குணர்ந்த அய்யனவர்களின் அரியதும், இனியதுமான வரலாற்றை ஆப்டோன் படங்களுடன் அழகாக அச்சிட்டு வெளியிடவேண்டுமென்பது தேவஸ்தான நிர்வாகிகள் விருப்பம். தமது விருப்பத்தை என்னிடம் கூறி நூலை விரை வில் தொகுத்து முடிக்கும்படி ஆணையிட்டு 1933-ஆம் ஆண்டில் அச்சேறிய "கதலிவனநாதன் சரிதம்" என்ற புத்தகத்தையும் அளித்தார்கள். அதனை நான் மிகவும் கவனமும் கருத்துமாக முழுதும் படித்தேன். அதிலுள்ள விஷயங்கள் மேன்மையுடையதாய், இன்பக் குவியலாய், சுவை நிரம்பிய தாய், விரும்பிக் கற்பதற்குரியதாய்ச் சிறந்து விளங்குகின்றன.

கதலிவனநாதன் சரிதப் பதிப்பாசிரியர்களில் ஒருவரும், அனுப்பர் பாளையம் கணிதாரூட சோதிட விற்பன்னருமாகிய பிரம்மஸ்ரீ அ. இ. ரா. முருகைய சோதிடர் அவர்கள், என்பால் மிகுதியான அன்பும், அபிமான மும் உடையவர்கள் என்று உறுதியாகக் கொண்டு, அச்சரிதத்திலிருந்து தேவைக்கேற்ற செய்திகளை எடுத்தும், குறைத்தும், கூட்டியும், சுருக்கியும், வடசொற்களைத் தமிழ்ச் சொல்லாக மாற்றியும், விஷயங்களை பொருத்தங் களுக்கேற்பப் பல தலைப்புகளிட்டும், "வாழைத்தோட்டத்து அய்யன் கோவில் வரலாறு" என்று பெயர் சூட்டியும் நூலை ஒருவாறு தொகுத்துளேன்.

இங்ஙனம் நான் தொகுத்தெழுதுவதற்கு பெரிதும் உதவியாயிருந்த "கதலிவனநாதன் சரிதத்திற்கு" எனது மனமார்ந்த நன்றியறிதலை வணக் கத்துடன் செலுத்துகிறேன்.

சிவச் செல்வரும், சிவாநுபூதி மகானுமாகிய சின்னையன் அவர்கள், பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று, ஞானசிரியரிடம் மந்திரோபதேசம் பெற்று, அபரிமிதமான உபகாரங்கள் புரிந்து, உலகம் புகழ விளங்கியது முதல்,

அவர், தாம் அன்பாய் வளர்த்த இடபம், அவரை, குடல் கிழியக் கொம்பினால் குத்தி அவர்தம் ஆருயிரை, கயிலாயஞ் செல்ல விடுத்ததுவரையுள்ள செய்திகளை அத்தியாயங்களில் எளிய தமிழ் நடையில் வாசகர்கள் விரும்பி ஏற்கும் வகையில் சுருக்கமாக எழுதியிருப்பதோடு, கோவில் இருக்குமிடம், செல்லும் வழிகள், தங்கும் வசதி, விழாக்கள் நிகழும் காலங்கள் முதலியவற்றையும் உடன் கூட்டி உருவாக்கியுள்ளேன்.

இச்சிறு நூலை அய்யன் கோவிலைத் தரிசிக்க வரும் அன்பர்கள் அன்புகூர்ந்து ஒரு பிரதி பெற்று ஓதுவார்களாயின் அவர், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் கொங்கு வேளாளரில் கீர குலத்தில், கல்வி, கேள்வி, அறிவு, சான்றாண்மை, உத்தம நோக்கம், உபகார எண்ணம், சிவச் சிந்தை, வித்தக சீலம், விளங்கு புகழ் முதலியவற்றால் மிக்குயர்ந்து புண்ணிய மூர்த்தி, சின்னையன் அவர்களே ஆவரென்று மனதாரப் புகழ்ந்துப் பேசாதிரார்.

இக்கலியிலும், தீராத நோய்களையும், ஆறாத புண்களையும், பல்வகை பாம்பு தேள் விஷங்களையும், புற்றிடத்து விளைந்த மண்மருந்தால் விரைவில் குணப்படுத்தும் அற்புத மகிமையுடையது வாழைத்தோட்டத்து அய்யன் கோவிலென்றால், யார்தான் கண்டு களிக்க வராது தாமதிப்பர்!

இவ்வரலாற்றை அழகாக அச்சிட்டு எளிய விலைக்குத் தமிழற்கு உதவிய தேவஸ்தான அதிகாரிகளுக்கு அன்பார்ந்த எனது வணக்கமும் நன்றியும் என்றும் உரியதாகுக!

பேரூர்,
கோவை.

(கையொப்பம்) சி. கு. நாராயணசாமி.

# அய்யன் துதி

1. மஞ்சேனத் திகழும்தூயக் கிளுவைமரச் சோதியாகி
தஞ்சமென் றடைந்தபேர்க்குத் தனிப்பெரும் கருணையினல்
அஞ்சேலென அருள்புரிய வாழைவனத் தய்யன்திருக்
கஞ்சமொத் தலர்ந்ததாளைக் கணம்மறவா தேத்துவோமே.

2. நற்குணங்கள் செழித்தோங்க நலிந்தவர்கள் துயர்நீங்க
புற்றுமண் நீறளித்துப் புவியிலுளோர் புண்துடைத்து
கற்பிதமாம் வையமிதில் கருணைமிகு மன்பிஞெரு
வெற்பெனத் துலங்குநல் லய்யனடி வாழ்த்துவமே.

3. கோதறு தேன்டமிழால் தொழுதுய்ய விருப்போடு
காதலி னடைந்தவர்க்குக் கவலைகள் மாய்க்கும்
வேதக் கடலனையக் கதலிவனத் தய்யனின்
போதவிழ் மலர்த்தாளைப் போற்றுவோம் மறவாதென்றும்.

4. தொல்லுலகில் பல்வினையும் இரவிகண்ட பனியதுபோல்
வல்லமையா லகற்றும் வாழைவனத் தய்யாவுன
நல்லோர்கள் புகழ்ந்திடுவர்; நஞ்சகற்றும் நாதனெனப்
பல்லோர்கள் தொழுதுய்யப் பாடுவதுமுன் புகழே.

5. மன்னுமுயிர்க் கட்கெல்லாம் மனத்துயர், களைவதொடு
பின்னையவர் செய்யும் பிழையெலாம் பொருத்தருளி
அன்னைபோல் அருள்சுரக்கும் நீறளித்துப் பிணிபோக்கும்
தன்மையதா மய்யன்திருக் கிளுவைப் போற்றுதுமே.

புனைந்தோன் :
**பி. வி. ஒன்னப்பன்,**
ஸ்ரீ வாழைத்தோட்டம்.

# கோவிலும், பெயர்க்காரணமும்

பிரகத்தீச்சுரம்,பட்டீச்சுரம்,தாடகேச்சுரம்,தொண்டீச்சுரம் என்ற பெயர்களை, சோழ நாட்டுத் திருக்கோயில்களுக்குப் பெயரிடுவது அந்த நாட்டு வழக்கம். கொங்கு நாட்டிலுள்ள சில சிறு தேவதைகள் கோவில்களுக்கு "நாட்டுராயன் கோவில்" "ஆகராசன் கோவில்" என்று பெயரிட்டழைப்பது இந்த நாட்டுப் பழக்கம். இப்பழக்கத்தைப் பின்பற்றி பல்லடம் தாலூக்காவைச் சார்ந்த அய்யன்பாளையம் கிராமத்திற்கு தெற்கில் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திலிருக்கும் "பெருந்தோட்டம்" என்று பெயர் வழங்கப்படும் இடத்தில் எடுப்பிக்கப் பெற்றுள்ள கோவிலுக்கு "வாழை தோட்டத்து அய்யன் கோவில்" என்று பெயரிடப் பட்டது. இன்றைக்கு சுமார் 95 ஆண்டுகளுக்கு முன் சிவப் பேறடைந்த சிவாநுபூதி மகானாகிய **சின்னையன்** அவர்களது திருவருள் பெற்று இன்றைக்கு மகிமைச் சிறந்து விளங்கும் காரணத்தால் அப்பெரியார் பெயர் இக்கோயிலுக்கு இடப்பட்டது போலும்!

"வாழைத் தோட்டத்து அய்யன் கோவில்" என்று பெயர் வழங்கப்பெறும் காரணம் — ஸ்ரீ சின்னையன் அவர்கள், தமது இளமைக் காலத்தில் அய்யன்பாளையத்திற் கருகிலுள்ள காளிபாளையம் வாழைத் தோட்டமொன்றை குத்தகைக்கு சாகுபடி செய்து வந்ததினால் அவரை ஊரார் யாவரும் "வாழைத் தோட்டத்து அய்யன்" என்று பெயரிட்டு அழைத்தனர். அதனால், அவரது இயற் பெயர் மறைந்து, இடுகுறிப் பெயரே ஓங்கி, அது வழக்கத்திலும் நிலைபெறுவதற்காயிற்று. "ஐயன்" என்பது பெரியாருக்கு மரியாதையாக வழங்கப்பெறும் ஓர் உபசாரச் சொல்.

## இடமும் - வழிகளும்

கொங்கு நாட்டு மக்களாலும், வாசிகளாலும் யாத்திரை மிகுதியாகக் கொண்டாடப்பெறும் வாழைத்தோட்டத்து அய்யன் கோவில் கோயமுத்தூர் ஜில்லா, பல்லடம் தாலூக்கா, அய்யம்பாளையத்தைச் சார்ந்ததோர் புண்ணியஸ்தலம். மகா மகிமை

பெற்று விளங்கும் இக்கோவில் மக்களால் பெரிதும்கொண்டாடப் பெற்று வருகிறது. இக்கோயிலைச் சுற்றி வீடுகளும், தெருக்களும் இல்லை. ஆனல், சகல வசதிகளும் நிறைந்த தனி கிராமம் போன்று கோவில் விளங்குகிறது. பயிர் விளை நிலமான சுமார் பத்து எக்கர் விஸ்தீரணமுள்ள புஞ்சை பூமியின் நடுவில் விளங்குவதே அய்யன்கோவில். பெயர் சிறந்த இக்கோவிலையும், மகத்துவம் மிகுந்த அய்யனையும் தரிசித்துத் தமது இட்டகாமியங்களை நிறைவேற்றிக்கொள்ள வரும், யாத்திரை வாசிகள் தென்னிந்திய ரெயில்வே ஈரோடு — போத்தனூர் மார்க்கத்திலிருக்கும் சோமனூர் என்னும் ரயில் நிலையத்தில் இறங்கவேண்டும்.

ரயில்வே காம்பவுண்டில் ஒற்றை, இரட்டை மாட்டு வண்டிகள் வாடகைக்கு கிடைக்கும். காப்பி ஒட்டல்களும் இருக்கின்றன. இனம் ஒன்றுக்கு வண்டி வாடகை நான்கு அணு. தனி வண்டிக்கு ஒரு ரூபாய் கேட்பார்கள். சோமனூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கோவில் தென் கிழக்கே சுமார் மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. ரயில் நிலையத்திலிருந்து கிழக்கில் சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கும் "சாமளாபுரம்" என்ற ஊர் வரையில் நல்ல கப்பிரோட்டு. அதற்கப்பால் காட்டு வழி. சோமனூர் கிழக் கெல்லையில் "காஞ்சிமா நதி" அல்லது "நொய்யலாறு" கிழமேற்கில் ஓடிக்கொண்டிருக்கிறது. மோட்டார் மூல்யம் வருபவர்கள் சாமளாபுரத்திலிருந்து நேர் கிழக்கே பள்ளபாளையம் வழியாக ஜில்லா போர்டு ரோட்டில் கோவில் வந்து சேரலாம். மோட்டார் வழி சுமார் நான்கு மைல்.

## மோட்டார் பஸ் மூலம் வரும் வழிகள்

மோட்டார் பஸ் மூலமாகக் கோயமுத்தூரிலிருந்து அய்யன் கோவில் வருபவர், அவிநாசி ரோட் கருமத்தம்பட்டியிலும், சேலம் ஈரோடு முதலிய இடங்களிலிருந்து வருபவர், திரு அவிநாசியை அடைந்து மேற்கில் சுமார் பதினன்கு மைல் தூரத்திலுள்ள மேற்கூறிய கருமத்தம்பட்டியிலும் வந்து இறங்க வேண்டும். சோமனூர் ஸ்டேஷன், கருமத்தம்பட்டியிலிருந்து நேர் தெற்கே ஒண்ணரை மைல் தூரத்திலிருக்கிறது. சூலூர் அய்யன் கோவிலுக்கு மேற்கே ஏழு மைல் தூரத்திலிருக்கிறது.

திருப்பூர், கோவிலுக்கு நேர் கிழக்கே பனிரெண்டு மைல் தூரத்திலிருக்கிறது. பல்லடம், கோவிலுக்குத் தெற்கே எட்டு மைல் தூரத்திலிருக்கிறது. அன்னூர், கோவிலுக்கு வடக்கே பதினைந்து மைல் தூரத்திலிருக்கிறது.

## ஏதுவும், எண்ணமும்

அய்யன் கோவில் அமைவதற்கான காரணமும், நந்தி தேவனருளால் கயிலாயம் அடைந்த ஆன்ரோராகிய சின்னையன் அவர்கள் மாண்பையும், மகிமையும் உத்தமபக்தியின் உயர்ந்த தன்மையையும், வித்தக வாழ்வின் வியத்தகு செயலையும், உலகம் போற்றிக் கொண்டாட வேண்டுமென்று, அவர் தம் அருமை பெருமை உணர்ந்த அறிஞர்கள் எண்ணினர்கள். அவர்கள் எண்ணியவாறே அப்பெரியார் நினைவின் அறிகுறியாக ஆலய மொன்று கட்டினல், அருள் நிரம்பிய அய்யனவர்கள் மக்களுடைய நன்மையைக் கருதி அவ்வாலயத்தினிடத்தில் தெய்வீகம் சிறந்து விளங்குமாறு செய்வர் என்ற நம்பிக்கையும் கொண்டனர். அந்த நம்பிக்கையின்படி இன்றைக்குச் சுமார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் "வாழைத்தோட்டத்து அய்யன்" அவர்களுக்குச் சொந்தமான புஞ்சை நிலத்தின் நடுவில் சிற்றாலயமொன்றைக் கட்டினர்கள். அவ்வாலயந்தான் இப்பொழுதும் கொடிய விஷக் கடியாலும், கடுமையான வியாதிகளாலும் மிகவும் நொந்து வருந்தும் ஆயிரக்கணக்கான தினர்களின் நோய்களை நீக்கி மகிழ்விக்கும் மகிமையுடையதாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

## அய்யனது பிறைத்தலமும் - அவர்தம் பாட்டியும் தந்தையும் புகுந்த புதூர்ப் பெயரும்

"தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார்
தோன்றலின் தோன்றுமை நன்று" (குறள்)

இக்கலி நாளிலும் மகிமை பெற்று "வாழைத்தோட்டத்து அய்யன்" என்று பெயர் பெருகிய சின்னையவேள் அவர்களுடைய பூர்வீக ஸ்தலம். கொங்கு மண்டலத்தில் திரு. அவிநாசி யென்னும் சிவஸ்தலத்தின் கீழ்திசையிலிருப்பது "மோரிப் பாளையம்" என்னும் சிற்றூர். இக்கிராமத்தில் தலைமை சிறந்த

பெருங்குடிப் பிரபுவாகப் பெயர் சிறந்து விளங்கியவர் "சின்னைய கவுண்டர்" என்பவர். இவருக்கு நெடுநாள் மகப்பேறு வாய்க்காமல் பின்தோன்றிய பிள்ளை ஐந்தாண்டு வயதை அடைந்ததும் சின்னைய கவுண்டர் மண்ணுலகு நீங்கி விண்ணுலகு சென்றனர். கணவன் இறந்ததும் கைம்பெண் வாழ்க்கையடைந்த சின்னைய கவுண்டர் மனைவி தன்னுடைய ஊரில் இருப்பதற்கு மனமில்லாது தனது ஒரே புதல்வன் "செங்காளியப்பனை" அழைத்துக்கொண்டு, தனக்கு நெருங்கிய பந்துவான அய்யன்பாளையம் ஸ்ரீ பச்சையண்ண கவுண்டர் என்னும் உபகாரியை அடைந்து, தன்னையும் தன் பிள்ளையையும் ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டாள். பரோபகாரியான பச்சையண்ண கவுண்டர் அவர்களும், அவர்களிருவரையும் தன் பண்ணையில் வேலைப்பார்த்து வரும்படி உத்திரவு செய்தார். தாயும் பிள்ளையும் அப்பண்ணைக் காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து ஊழியம் செய்து வந்தார்கள். அவர்களது கபடற்ற உழைப்பையும், கள்ள மற்ற நெஞ்சையும் கவனித்துணர்ந்த பச்சையண்ண கவுண்டர், அவர்களிடத்தில் மெய்யன்பு கொண்டு, தமது பெண்ணைக் கொடுத்து செங்காளியப்பனை தனது மருமகனாக்கிக் கொண்டார். செங்காளியப்பன் என்பவருக்கு பச்சையண்ணர் பிரிய புதல்வியின் மூலம் பிறந்த எட்டுப் பெண்களுக்கு பின்னால் ஒன்பதாவது ஆண் பிள்ளையாகத் தோன்றியவரே "சின்னையன்" என்பவர்.

திரு விளங்கும் சின்னையன் அவர்கள் ஜனன காலம் கலியுக சகாப்தம் 4878. சாலிய வாகன சகாப்தம் 1699-க்குச் சரியான எவிளம்பி வருஷம் தட்சணாயன புண்ணிய காலம், மார்கழி மாதம் 18-ந் தேதி வியாழக்கிழமை கிருஷ்ண பட்சம், ஏகாதசியும், விசாக நட்சத்திரமும், திரிதிய நாம யோகமும், கௌலவ வாகரணமும் கூடிய சுப தினத்தில் பகல் 18-½ நாழிகைக்கு என்று அறுப்பர் பாளையம் சோதிட சாஸ்திர விற்பன்னர் ஸ்ரீ அ. இரா. முருகைய சோதிடர் அவர்களால் நிர்ணயிக்கப் பெற்றிருக்கிறது.

## சின்னையன் இளமையும், கல்வி கற்றதும்

அய்யன்பாளையம் பச்சையண்ணச் செல்வருக்கு மருமகனை வாய்க்கப்பெற்ற செங்காளியப்ப கவுண்டருக்கு அவரது பெயர்

விளங்க, குலம் விளங்க, குடி விளங்க, கோத்திரம் விளங்க, ஊர்ப் பெயர் விளங்க, புகழ் விளங்க, இவ்வனைத்துக்கும் மேலாக விஷக் கடியால் நொந்து வருந்தும் மக்கள் அந்நோய் நீங்கிச் சுகம் பெற்றுக் களிக்கத் தோன்றிய "சின்னையன்" ஆறு வயதடைந்ததும் பெற்றோர்கள் தமது அருமைப் பிள்ளையை பள்ளிக்கூடத்திற் கனுப்பினர். பள்ளியடைந்த சின்னையன் கல்வியை கவனமுடன் கற்பதும் கடவுளைத் துதிப்பதும், ஆசிரியர் கருத்தறிந்து அவர் மனம் களிக்க நடந்து கொள்வதும், தனது கடமையாகக் கொண்டு நடந்தனன்.

இளமைக் காலத்திலேயே இளஞ்சிறுவன் சின்னையன் இறைவன் திருவருளால் தனக்கு இயற்கையாய் அமைந்திருந்த அறிவைக் கொண்டு, தனக்கு வாய்த்த சமயங்களிலெல்லாம் தண்ணளி நிரம்பிய தயாபரக் கடவுளின் திருவடியை மறவாது வணங்கினன். அதனுடன் தன் பெற்றோர் கட்டளைக்கு கீழ்ப் படிதல், அவர் மனங்களிக்க நடந்து கொள்ளுதல், எவருடனும் இனிமையாக உரையாடுதல் முதலிய நற்குணங்களை நன்றாகக் கற்றுக்கொண்டிருந்தான்.

இத்தகைய இளஞ்சிறுவனது உயரிய ஒழுக்க நலம், பள்ளி ஆசிரியர், தாய் தந்தையர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. அவர்கள் தம் நற் புதல்வனது அருங் குணங்கள் அவனது எதிர் கால உயர் நிலையையே நினைவூட்டுகின்றதென்று எண்ணி சந்தோஷப்பட்டனர்.

## மாடு மேய்த்தலும் - சொப்பனங் கண்டதும்

இங்ஙனம் பன்னிரண்டு வயது கடந்ததும், சின்னையனின் தகப்பனார் அவனது படிப்பை நிறுத்தி, பயிர்த் தொழிலுக்கு இன்றியமையாத கால்நடைகளின் குணம், குறி, செயல், அமைப்பு, வளர்ப்பு ஆகியவற்றைக் கற்றறிவதற்கு மாடு மேய்க்கும் தொழிலில் அமர்த்தினர். சின்னையன் தமக்குச் சொந்தமான பசுக்களையும், காளைமாடுகளையும், மேய்ச்சல் இடத்திற்கு ஓட்டிச் சென்று வயிறு நிறைய மேய்த்து தண்ணீர் காட்டி வீட்டுக்கு ஓட்டி வருவான்.

நமது சின்னையன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தாலும், இறைவன் வழிபாட்டை மறவாமல், மேய்ச்சல் புலத்தை அடுத்திருந்த நீர் நிலையத்தில் மூழ்கி அங்கு மலர்ந்திருந்த மலர்களைப் பறித்து வந்து சிறு மேடை அமைத்து அதன் மீது சில கற்களைப் பொறுக்கிக் கொணர்ந்து வரிசைப்பட அடுக்கி, அம்மேடையை இறைவன் கோவிலாகவும், கற்களைச் சிவலிங்கமாகவும் கருதி, அவைகட்கு நீராட்டி, மலர் சூட்டி, அலங்கரித்து, பழங்களால் நிவேதித்து புகழ்ந்து பாடி வணங்கி வந்தனன்.

சிறுவன் பூசை முடிந்த சில சமயங்களில் அம் மேய்ச்சல் புலத்தில் தனித்திருந்து, இயற்கை தேவியின் அற்புத அழகினையும் எல்லாம் வல்ல இறைவன் சிருஷ்டி மகிமையையும் கண்ணாரக் கண்டு மகிழ்வான்.

இங்ஙனம் நிமிஷத்திற்கு நிமிஷம், நாளுக்கு நாள் எல்லாம் வல்ல இறைவனைப் பற்றிய எண்ணங்களே சின்னையன் மனதில் நிறைந்து குவிந்தன.

> "நற்குலத்திடை வருதலுமரிது ஞானத்தான் முக்கணீ
> சறுக்காட்படல் முற்றிலு மரிதே."

## ஞானசிரியர் தோற்றமும் - மந்திரோபதேசங்கள் பெறுதலும்

இங்ஙனம் இருக்கும் நாளில், ஓர் இரவு சின்னையன் அயர்ந்து தூங்கும்போது அவனது சொப்பனத்தில் சுந்தர ரூபமான ஓர் மகா புருடன் தோன்றி, தனக்கு அகண்டானந்த பரிபூரண நிலையைப் பற்றி விளக்கம் பெற உபதேசித்ததாகக் கண்டு, அதிசயித்து, விழித்து படுக்கையை விட்டெழுந்து, காலைக் கடன்களை முடித்து, மாடு கன்றுகளை வழக்கம்போல் மேய்ச்சல் புலத்திற்கு ஓட்டிச்சென்றார். தான் ஓடையில் நீராடி, வழக்கம்போல் மேடை யமைத்து, கற்களை அடுக்கி, மலர்களால் அருச்சித்து, கற்களை சிவலிங்க வடிவங்களாகப் பாவித்து எதிரில் நின்று, உச்சி மீது இரு கரங்களையும் குவித்து உருக்கமுடன் பாடி தன்னையும் மறந்து அசை வற்று நின்றனன். இங்ஙனம் தன்னையும், காலம், இடம், ஆகிய வற்றையும் அறவே மறந்து தியான நிலையிலிருந்தவனுக்கு விழிப்புத் தோன்ற பூசை மேடையை நோக்கினன்.

அப்போது அம் மேடைமீது, தண்டு கமண்டலங்களை யேந்திய கரமும், பொன்னொளி தோற்றமும், திரு மேனியும், நீண்ட சடை முடியும், அன்பொழுகும் கண்களும், அருளொழுகு முகமும், கண்டோரைக் கணத்தில் வசிகரிக்கும் இன்பப் புன்னகையுடன் சித்த மூர்த்தியொருவர் வீற்றிருக்கக்கண்டனன். அவ்வதிசய உருவத்தை கண்ட சின்னையன் உடனே அச்சித்த மூர்த்தியின் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து, மெல்ல எழுந்து, வாய் பொத்தி நின்றான். அவனது வணக்கத்திற்கு மகிழ்ந்தப் பெரியார், அம்மேடையின் அருகில் நச்சுப் பையையுடைய நெடிய நாகப்பாம்பு ஊர்ந்து செல்வதைக்கண்டு, அச்சின்னையனை விளித்து "அன்பனே, அங்கு ஊர்ந்து செல்லும் சர்ப்பத்தை அசையாமல் அங்கேயே நிற்கும்படி நாம் ஆணையிட்டதாகக் கூறு" என்று கூறினார். சின்னையன் அவ்வாறே உத்தரவிட, சர்ப்பமும் அசையாமல் நின்றது. சிறிது நேரம், சித்தர் சின்னையனை அழைத்து "அப்பாம்பை இவ்விடத்தை விட்டுப் போகச் சொல்" என்று கூறவே, சின்னையன் அவ்வாறே உத்திர விட சர்ப்பமும் மறைந்தது.

அத்தகைய அதிசயக் காட்சியைக் கண்ட சின்னையன் மறு படியும் அம்மகான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, எழுந்து நின்று "அருட் பெருங் குருவே! நச்சுப்பையையுடைய நாக பாம்புக்களாலும், விஷமுடைய் இதர ஜீவப்பிராணிகளாலும் துன்புறும் உலகினரை, அத்துன்பத்தினின்றும் மீட்கும் மார்க் கத்தைப் போதித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அச்சிறுவனது பரோபகார குணத்தை புகழ்ந்த அம்மகான் சர்வ விஷ சம்மார மந்திரத்தை அவனுக்கு உபதேசித்து, பக்தி யோகத் தின் பெருமையை விளக்கிக் காட்டி, அவன் செவியில் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்தருளினர். பின்னர். அம் மகாபுருடர், சின்னையன் வேண்டுகோளுக்கிரங்கி அவன் இல்லத் திற்கு எழுந்தருளினர்.

## ஆசிரியர் இல்லத்திற்கு எழுந்தருளியதும் மாயங் காட்டி மறைந்ததும்

தனது இல்லத்திற்கு எழுந்தருளிய சித்த மூர்த்திகளின் அரிய வரவுக்கு சின்னையன் அகமகிழ்ந்து தனது வீடும், தனது குடும்ப

மும், தன்னூரும் புனிதம் பெற்றதாகக் கருதி பேரானந்தங் கொண்டு, அப் பெரியாரை தூய்மையான தனி அறையில் இருத்தி, தானும், தன் குடும்பத்தாரும் அவருக்கு பணிவிடை செய்தனர். பெரியார் புசிப்பதற்கெனத் தனியாக அமுதும் தயாரிக்க ஏற்பாடு செய்துவிட்டு, சின்னையன் மூர்த்திகள் வீற்றிருக்கும் தனி விடுதியை அடைந்தான். அவ்விடுதியில் பலர் பேசும் சப்தம் கேட்டது. உற்றுக் கவனித்தபோது விவரிக்க முடியாத அற்புதக் காட்சிகள் அவனுக்குப் புலப்பட்டது. சித்த மூர்த்தியைப் போன்ற பல ஞானசிரியர்கள் ஒருவருக்கொருவர் பேசுவதைப் போலவும், பல்வகை விருட்சங்கள் நிறைந்த சோலையைப் போலவும், பச்சென்று பரவிய நிலப்பரப்பைப் போலவும், மற்றும் பல தோற்றங்களைக் கண்ட சின்னையன் அதிசயித்து நின்ற நிலையிலேயே அசைவற்று நின்று நோக்கிக்கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் சகல காட்சிகளும் திடீரென மறைந்து, கயிலாய மலையும், அத்திருமலைமீது நந்தி தேவரும், முனிவர் கூட்டமும், தேவர்களும், பூத கணங்களும் புடைசூழ முக்கண் மூர்த்தி பார்வதியம்மையாருடன் கொலுவீற்றிருக்கும் அற்புத காட்சியைக் கண்டு, ஒன்றுந் தோன்றாமல், பரவசமுற்று, மெய் மறந்திருந்தனன், சின்னையன்.

இந்நிலையில் சுமார் இரண்டு மணி நேரம் கழிந்தபின் உணர்ச்சி பெற்று விழித்துப் பார்த்தனன். சகல தோற்றங்களும் மறைந்துவிட்டன. ஞானசிரியரும் மறைந்துவிட்டார். மேல் நடக்கவிருக்கும் சம்பவங்களுக்கு இது எடுத்துக்காட்டுபோலும் என்று மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, சின்னையன் குரு நாதனைக் காணவேண்டுமென்ற ஒரே கவலையுடனும், ஏக்கத் துடனும் இருந்து வந்தான்.

## காணும் ஆசையும், தேடியலைந்ததும்

எல்லாம் வல்ல சித்தராய் விளங்கி பல்வகை அரிய சிறு விளையாட்டுகளைச் செய்து மாயமாய் மறைந்த ஞானசிரியர் நினைவே நீங்கா நினைவாய், சின்னையன் ஊண், உறக்கமின்றி, வருந்திக்கொண்டிருந்தான். அவன் நிலைமையைக் கண்ட ஊரார் பலவிதமாய்ப் பேசினர். அவன் பெற்றோர்களும் வருந்தினர்.

சின்னையன் தனது கடமையைக் கைவிடாமலும், சிவ பூஜையை மறவாமலும் நடத்திவந்தான். அப்பொழுது வயது பதினைந்து நடந்துகொண்டிருந்தது. தான் நாள்தோறும் மாடு மேய்க்கும் புற்றரைக் காட்டில் சின்னையன் தனது ஞாஞசிரியரைக் காணும் ஆசையால் தேடித் திரிவான். ஒரு நாள் அங்ஙனம் தேடிக்கொண்டிருக்கையில், ஓரிடத்தில் சிவாலயமும் சிவலிங்கமும் விளக்கங் கண்டு அதிசயித்து, அவ்வாலயத்துட் சென்று, பக்திப் பரவசத்திருக்கையில், தனக்குப் பின்னுல் யாரோ வரும் காலடி சப்தம் கேட்டு திரும்பிப் பார்க்க, தன் குருமூர்த்தி வருவதைக் கண்டு விரைந்து ஓடிச்சென்று அவருடைய திருவடிகளில் கோவெனக் கதறினன். அன்பு வடிவங்கொண்ட அச்சித்தமூர்த்தி, சிறுவன் சின்னையனை தமது இரு கையாலும் வாரியெடுத்து ஆதரவு கூறி,

"குழந்தாய்! நீ எம்மிடத்தில் இவ்வளவு பற்றுக் கொண்டிருப்பது நியாயமன்று. எம்மிடத்தில் உனக்கு அன்பு இருக்கட்டும். ஆனல் இவ்வளவு முதிர்ந்த அன்பு வையாதே. பந்தமுடையோர் மோட்சத்திற்கு தகுதியாகமாட்டார்கள். எனென்ருல் அன்பு வேறு, பந்தம் வேறு. அவையிரண்டும் மனத்தின் வெவ்வேருன நிலைகளிலிருந்து தோன்றுவன. இவ்விரண்டில் அன்பானது இறப்பையும், பிறப்பையும் போக்கி இறைவனுடைய பேரருளுக்கு உரியவனைக்கூடிய நிலைமைக்கு உயர்த்தும். பந்தமானது தொடர்ச்சியான பிறப்பு, இறப்பு என்னும் மரணச் சுழலில் தாழ்த்தும். ஆகவே குழந்தாய்! நீ எல்லா உயிர்களிடமும் அன்புசெலுத்துவாய். பந்தம் வையாதே. பந்தமுடையோன் விவேகியாகான்."

"நாம் எவ்வுயிருக்கும், உண்மையோடும் இரக்கத்தோடும் செலுத்தக்கூடிய அன்பு இறைவனுக்குச் செலுத்தியதற்குச் சமமாகும். ஆனல், எவரிடத்தும், எத்தகையரிடத்தும் பந்தம் வைக்கக்கூடாது. எவ்வுயிருக்கும் அன்பு செலுத்தி எவ்விஷயங் களிலும் பற்றற்றுத் தாமரையிலைத் தண்ணீர் போல உலக விஷயங்களோடு ஒட்டியொழுகித் தனித்திருப்பாய்."

"சகல தத்துவங்களும் நம்மால் ஆளப்படக் கூடியனவே யன்றித் தத்துவங்களால் நாம் ஆளப்படக்கூடாது. விணை அறுந் தால் எல்லாத் தத்துவங்களையும் கடந்தவர்களாகிறோம். தத்துவங் கடந்தோர், தனிப் பெருஞ் சுடர்மயமாகி ஒளியுலகத்தை தரிசித்து நித்திய வாழ்வை யடைகிறார்கள்: ஆகவே, குழந்தாய்! நீ தத்துவ பரிசோதனை செய்து, கால பந்தங்களினின்றும் உன்னை விடுவித்துக்கொள்ள முயற்சி செய்."

"யாம் அன்றிரவு உன்னுடைய இல்லத்தில் நிகழ்த்திய சித்திகளை. விளையாட்டுக்காக காட்டினோமில்லை. முமுச்சுக் களின் சாதனை முயற்சியால் மனம் பரிபூரண தசைக்குச் சென்று கொண்டிருக்கும் வழியில் நினைப்பளவில் சித்துக்களை இயற்றும் ஆற்றலைப் பெறுகிறது. இதனை மெய்ப்பித்து காட்டுவதற்காக நீ காணும்படி சில சித்துக்களைச் செய்து காட்டினோமேயன்றி, அச் சித்து வித்தைகள் ஒரு ஜீவனை கடைத்தேற்றுவிக்கும், என்பதற் காகவல்ல. சித்திகளைச் செய்யும் வல்லமை பெற்றுவிட்டதனா லேயே, ஆன்மா கடவுட்டன்மையைப் பெறமுடியாது. சித்திகள் ஜீவனுடைய முன்னேற்றத்தைத் தடை செய்யக்கூடியவைகள் என்பது, உன்னுடைய எதிர்கால அனுபவத்தில் நீ விளக்கங் காண்பாய். எனவே, நீ சித்திகளில் சிந்தையை செலுத்திவிடாதே. எத்தகைய அரிய சித்திகளைக் கண்ணுற்றாலும் வியப்படையாமல், அவைகளை துரும்புபோல எண்ணுக. மற்றும் நீ இல்லறத்திலிருந்து உன்னால் இயன்றவற்றை உலகில் உயிர்வாழ் மக்களுக்கு உதவி, நன்மையோ, தீமையோ, எது வரினும் அவைகளை ஊழ் விணை என்று உணர்ந்து, சாந்தமும், பொறுமையும் நிறைந்த உள்ளத் துடன், இல்வாழ்வை இனிது நடாத்தி இறுதியில் முத்தி வீடு அடைவாய்."

என்று அமுத மழை பொழிந்தனர். அவைகளைக் கேட்ட சின்னையன், அபாயமான உலகச் சுழலில் சிக்கி அவதியுற தனக்கு விருப்பமில்லையென்பதை குருநாதனிடம் தெரிவிக்க குருநாதன் சின்னையனை நோக்கி, "குழந்தாய்! நீ எமது ஆணையைக் கடக்க வேண்டாம். நீ இல்லறத்தை அவமதிப்பது உன்னுடைய உயிர்த் தொடர்பின் அறத்தையே அவமதிப்பதாகும். எவ்விஷயங்களிலும்

பற்றின்றிச் செவ்வையாக இல்லறத்தை நடத்துபவன், முற்றுந் துறந்த ஒரு தவயோகியிலும் சிறந்தவன். "இல்லறமின்றி துறவற மின்று—இல்லறமல்லது நல்லறமின்று" என்பது ஆன்றோர் வாக்கு. உலகின் உயிர்களுக்கு நன்மை செய்து இல்லறத்தை நடத்து கின்றவன் பூத உடம்பை நீத்தாலும் புகழுடம்பு பெற்று இவ்வுலகில் விளங்குகிறான். இறைவனுக்குத் திருத்தொண்டர் களாய் விளங்கிய அறுபத்துமூன்று நாயன்மார்களும், ஆழ்வா ராதிகளும், இல்லற வாழ்க்கையைப் பின் பற்றியே வீடு பெற் றார்கள். ஆகவே குழந்தாய்! இல்லற வாழ்க்கையை மதித்து, ஈசன் திருவடியில் அன்பு பூண்டு, உன்னாலானவைகளை உயிர் களுக்குச் செய்து, உனது எழுபத்திரண்டாம் ஆண்டில் வீடு பெறுக" என்று கட்டளையிட்டருளினர்.

சின்னையன் உளமிக மகிழ்ந்து ஆணைப்படி நடப்பதாகக் கூறி ஆசிரியரிடம் விடை பெற்று வீடு திரும்பினன்.

அது முதல் தனது ஞானசிரியரவர்கள் அருளிய ஆணைப்படி திருவருளைத் துணையாகக் கொண்டும், பெற்றோர்களால் திருமணக்கப்பெற்று, இல்லறத்தை நல்லறமாக நடத்தி புதல்வர்களைப் பெற்று, தம்மை நாடிவந்த நோயாளர்களின் தீராத பிணிகளை திருநீற்றாலும், பஞ்சாட்சர மந்திரத்தாலும் தீர்த்து, நாக பாம்புக்களாலும், தேள்களாலும், மற்றுமுள்ள கொடிய விஷ ஜந்துக்களாலும் கடியுண்டு மரண வேதனைப்படும் மாந்தரின் துன்பத்தைப் போக்கிவந்தார். சிவச் செல்வர் சின்னையவேள் அவர்கள்.

அன்றியும் தம்மை நாடிவரும் நோயாளர்கள் எவரிடத்தும் யாதொரு கைம்மாறு பெறாமல், அவர்களுக்கு நன்மொழி கூறி சின்னையவேள் வழியனுப்புவர். இப்பெரியாரின் தெய்வ பக்தி, இரக்கம், சாந்தம், பொறுமை, சத்தியம் ஆகிய அரும் பெருங் குணங்களை நன்கறிந்த ஊராரும், பிறரும், அவரிடத்து அளவற்ற அன்பும், மதிப்பும், நம்பிக்கையும், பயமும், பக்தியும் கொண்டு அவரைப் பெரிய "பரோபகாரி" என்று புகழ்ந்து வாழ்த்தி வந்தனர்.

## தியாக புத்தியும் - பரோபகாரங்களும்

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு" (குறள்)

கல்வி அறிவும், கடவுள் வழிபாடும், கருணையுள்ளமும் ஒழுக்கமும் ஆகியவற்றால் உயர்ந்த மேலோர், நன்மைகள் செய்யும் நாட்டமுடையவராகவும், கோபம், கடுஞ்சொல் முதலிய தீய குணமில்லாதவராகவும், பிறரது துன்பங்கண்டு பொறாதவர் களாகவும், தாமே வலிதிற்சென்று உபகாரம் செய்யக்கூடியவர் களாவும் இருப்பர். அவ்வாறு அவர்கள் செய்வது, ஏதேனும் பிரதி பிரயோசனத்தை எதிர்பார்த்தல்ல. மனிதனது கைபுகழ் கருதியோ, நாவினுக்கு இனிய உணவை அளிக்கிறது! அம்மட்டோ! தமக்கு தீங்கிழைப்பவர்களுக்கும் நன்மையே செய்வர்.

மாந்தர் தன்னை வெட்டி வீழ்த்துந்தனையும் மரம் குளிர்ந்த நிழலையே கொடுத்து உதவுகின்றதன்றோ! மரங்கள் பழுப்பதும், நதிகள் பெருகுவதும், பசுக்கள் பால் தருவதும் பரோபகாரத்தின் பொருட்டேயாதல் போல், நமக்குத் தேகமும் பரோபகாரத்தின் பொருட்டே ஆண்டவனால் அளிக்கப்பட்டுள்ளது. அந்த தேகத்தைப் பெற்றவரே சின்னையவேள் அவர்கள். அவர் தமது ஜீவிய காலத்தில் மக்களுக்குச் செய்த அரிய உதவிகளும், உபகாரங்களும் மிகப்பல. அவற்றுள் சிலவற்றை அன்பர்கள் அறியும் பொருட்டு இதன் கீழ் விவரிக்கின்றேன். அவைகள் வருமாறு:—

1. ஒரு நாள் தமது தோட்டத்துத்துப் பண்ணையாள் வேலைக்கு வராமல் இருந்ததை அறிந்த நமது சின்னையன் அவர்கள் ஏற்றம் இறைத்து தண்ணீர் பாய்ச்சும் வேலையைத் தாமே சந்தோஷமாகச் செய்துகொண்டிருந்தார். அந்த சமயத்தில் பாம்பினால் கடியுண்ட அயலூரான் ஒருவன் அங்கு கொண்டு வரப்பட்டான். அவனை அங்கு கொண்டுவந்தவர்களுள் ஒருவன் சின்னையனை நோக்கி "தாங்கள் இறைக்கும் ஏற்றத்தை நான் இறைத்து தண்ணீர் பாய்ச்சுகிறேன். தாங்கள் நான் கொண்டு வந்திருப்பவனுடைய பாம்பு கடி விஷத்தை இறக்கி சொஸ்தப்

படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று வணக்கமாக வேண்டிக்கொண்டான். அது கேட்ட சிவ பக்தர் சின்னையன் அவர்கள் "நீ என் வேலையைச் செய்யவேண்டாம். அது நாம் பிரதி பிரயோசனத்தைப் பெற்றுக்கொண்டதற்கு சமமாகும். தண்ணீர் தானுகவே பாயட்டும்" என்று கூறி அரவந்தீண்டிய அயலூரானது விஷத்தை நொடிப்பொழுதில் போக்கினர்.

2. மற்றெருநாள், அவிநாசித் தாலூக்கா சேவூர் தாசில்தார் மனைவிக்கு வெண் குட்டம் தேகம் முழுவதும் படர்ந்து மிகவும் விகாரப்படுத்தி பத்து ஆண்டுகளாகப் பிரபலம் பெற்ற பல வைத்திய நிபுணர்களைக் கொண்டு மருந்து கொடுத்தும், அப்படு நோய் நீங்கவில்லை. சிவநேசர் சின்னையன் அவர்கள் மகத்து வத்தைக் கேள்விப்பட்ட தாசில்தார் உடனே சென்று அய்யன் பாளையத்துப் பெரியாரை அழைத்துவந்து தமது மனைவியின் நோயை விலக்கி அருளும்படி வேண்டிக்கொண்டார். பெரியாரும் ஞானுசிரியரைத் தியானித்து பஞ்சாட்சரத்தை செபித்து திருநீறு கொடுத்து நோய் கண்ட இடங்களில் பூசும்படி சொன்னர். அவ்வாறே பத்து நாட்கள் காலை மாலைகளில் செய்யவே, அந்நோய் முழுதும் நீங்கி தேகம் முன்னிலும் பன்மடங்கு அழகு பெற்று விளங்கியது. அவ்வதிசயத்தை யாவரும் கண்டு அகமகிழ்ந்து அய்யனவர்களின் அற்புத சக்தியை பாராட்டினர். தாசில்தார் அவரிடத்து அளவற்ற மதிப்பும், அன்பும், அச்சமுங்கொண்டு ஓராயிரம் ரூபாய்களை ஓர் வெள்ளித்தட்டில் வைத்து ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் வேண்டிக்கொண்டார். அப்போது சின்னையவேள் அவர்கள் அவரை நோக்கிக் கூறிய அறிவுரைகள், மக்களானேர், ஒவ்வொருவரும் கவனித்துப் போற்றத்தக்க அத்துணை உயர்வுடையவை. அவை வருமாறு:—

"அந்தணரே! மானிட தர்மம் என்பது ஒவ்வொருவரிடத்தும் தனித்தனிக் கடமையாகக் காணப்படவேண்டியது கடவுளது விருப்பம். அவ்விருப்பத்தின்படி, தன்னலியன்றதைத் துன்பம் அடைந்த உயிர்களுக்குச் செய்யாதவன், தனது கடமை யினின்றும் தவறியவனுவன். மேலும் உபகாரம் என்பது, விலைக்கு விற்கக்கூடிய ஒரு பொருள் அல்ல. பெருந்தொகையான

பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட மருந்துகளைக் கொண்டு நாம் தங்களுடைய மனைவியின் நோயைக் குணப்படுத்தவில்லை. சிறிதளவு திரு நீற்றையே பூசினோம். அத்திரு நீற்றுக்காக ஓராயிரம் ரூபாய் எதற்காக நழக்கு! அன்றியும், யாமாக அக் கொடு நோயை நீக்கவில்லை. இறைவன் மக்களிடத்தில் காட்டும் அருள் இரக்கத்தின் முறைப்படி எம்மூலமாக தங்கள் மனைவியின் துன்பத்தைப் போக்கினார்கள் என்று தாங்கள் கருதவேண்டும். ஆண்டவன் உலகத்தின் பெருக்கத்திற்கு ஏற்ற தமது நோக்கங்களை செலுத்துவதற்குத் தமது மக்களையே அவர் கருவியாகப் பயன் படுத்திக்கொள்ளுகிறார். ஆகையால், அக் கடவுள் செய்த காரியத்திற்காக யாம் கைக்கூலி பெறுவது தகாது ஆதலால், இது சமயம் எம்மிடத்தில் செலுத்தும் நன்றியை, தாங்கள் அக்கடவுளுக்குச் செலுத்துவீராக!" என்று விளம்பினார்.

அன்புடன் அருளும் நிரம்பிய அவ்வமுதமொழிகளைக் கேட்ட தாசில்தார் மிகவும் மகிழ்ந்து, சின்னையன் அவர்களை ஒரு பெரிய தவசிரேட்டர், தியாகமூர்த்தி என மகிழ்ந்து மதித்து அப்பெரியாரை தன் வண்டியிலேற்றி உபசாரத்துடன் வழியனுப்பிக் கொடுத்தனர்.

3. மற்றொரு சமயம் கொங்கு நாட்டின் சூரனூர்ப் பக்கத்திலிருந்து வந்த வேளாள விவசாயி ஒருவன், சின்னையன் அவர்களுக்குச் சொந்தமான விளை நிலத்தை குத்தகைக்குப் பேசி சாகுபடி செய்துவந்தான். அவன் அய்யம்பாளையம் வரும் பொழுது ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஆடுமாடுகளையும், விவசாயக் கருவிகளையும் கொண்டுவந்தான். அவன் அரும் பாடுபட்டும் பூமி போதுமான பலனைக் கொடுக்கவில்லை. அதனால் ஆண்டு தோறும் நஷ்டமே பெருகிக்கொண்டு வந்தது. சின்னையன், அவன் துரதிர்ஷ்டத்திற்குப் பெரிதும் இரங்கி அவன் கஷ்ட நிவர்த்திக்குத் தமது கையிலிருந்து பணம் கொடுத்து உதவி வந்தார். என்ன உதவி செய்தும், அவனுக்கு நற்காலம் இல்லாததனால், அவனும் அவன் குடும்பமும் கஷ்டத்தையே அடைந்துவந்தார். ஒரு நாள் மனமுடைந்த விவசாயி அய்யனை அடுத்து, "அருண்மூர்த்தியே! நான் படாத பாடுபட்டும் பூமி

பயன் தரவில்லை. தாங்கள் ஆயிரம் ரூபாய் உதவியும் பலனில்லாது போயிற்று. தாங்கள் உதவிய தொகையை தங்களுக்குத் திருப்பிக் கொடுப்பது எவ்விதம்? ஆயின் அத்தொகைக்கு ஈடாக, எனது கால் நடைகளையும், விவசாயக் கருவிகளையும் தங்களிடம் ஒப்புவித்து விடை பெற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லி கதறிப் புலம்பினான்.

பிறர் துன்பம் பொருத காருண்ய மூர்த்தியாகிய சின்னையன் அவர்கள் அவன் அழுகைக்கு இரங்கி "அன்பனே! வருந்தாதே. மனித வாழ்க்கை அவரவர்களுடைய வினைகளுக்கு ஏற்றபடி நடைபெறுகின்றது. இதற்காக நோவது பேதமை. உனக்கு நற்காலம் விரைவில் வரும். கவலைப்படாதீர்.

"இடுக்கண் வருங்கால் நகுக வதனையடுத்தூர்வ தஃதொப்பதில்" என்பது தேவர் திருவாக்கு. ஊழ்வலியின் காரணமாகத் துன்பம் நேர்ந்த காலத்தில் அத்துன்பத்தோடு எதிர்த்து நின்று காரியத்தைக் கவனிப்பவனே அறிவுடையவன். எக்காரியத்திற்கும் ஊக்கம் வேண்டும். நீர் தைரியத்தை கைவிடாதீர். உமது சொந்த ஊருக்குச் சென்று ஒரு நிலத்தை குத்தகைக்குப் பேசி பண்ணைத் தொழிலைச் செய்துக்கொண்டிரும். எமக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு ஈடாக உமது கால்நடைகளை எம்மிடம் விட்டுச் செல்லாதீர். அதை நீரே பயன்படுத்திக் கொள்ளும். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் நீர் நாதனருளால் நலம் பல பெறுவீர்." என்று ஆறுதல் சொல்லி விடை கொடுத்தனர்.

அய்யன் உத்திரவு பெற்ற விவசாயி, தன் ஊருக்குச் செல்வதை அறித்த சின்னையன் அவர்களுடைய குமாரர்கள் அவனுடைய கால்நடைகளைக் கைப்பற்ற முயற்சிக்க, இதையறிந்து சின்னைய பூபதி விரைந்து சென்று தன் குமாரர்களைக் கண்டித்தனர். அவ்விவசாயி சின்னையன் அவர்களின் அன்பைப் பெரிதும் பாராட்டி அவர் ஆசி பெற்று ஊர் திரும்பினன்.

4. சிவச் செல்வரும், ஜீவகாருண்யமான சின்னையன் அவர்கள் ஜீவப்பிராணிகள் எவற்றையும் இம்சிக்க துணிவதில்லை. தமது கண்முன் ஒருவர் ஓர் உயிரைத் துன்புறுத்தவும் விடுவதில்லை.

பூரணமான அன்பையும், இரக்கத்தையும் நாம் பிற உயிர்களிடத்தில் காட்டினல், அவைகளும், அவ்வன்பின் உணர்ச்சியோடு நமக்கு வசப்படும் என்பது அப்பெரியாரது எண்ணம். இந்த அன்பின் உணர்ச்சியே அவர் எல்லா உயிர்களிடத்திலும் கொண்டிருந்ததினல், தீயதான ஜந்துக்களும் அவருடைய ஆத்ம சக்திக்குக் கீழ்படியக் கூடியவையாயிருந்தன. இதனை விளக்க அவருடைய வாழ்நாளில் நிகழ்ந்த மற்ருெரு செய்தியையும் இங்கு கூறுகின்றேன். அது:—

சன்மார்க்க சீலரான சின்னையன் அவர்களுடைய உடன் பிறந்தாளொருத்தி ஒரு நாள், தனது சமையல் அறையில் பெரிய நாக சர்ப்பம் படம் விரித்து ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டு அலறி ஓடி வருவதைக் கண்ட சிலர் கைக்குக் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு அறையில் புகுந்து அப்பாம்பைக் கொல்ல முயன்றனர். அதையறிந்த தீனதயாளர் விரைந்து ஓடி அவர்களை மறித்து, அச்சர்ப்பத்தை நோக்கி "அப்பனே! இடம் விட்டு இடம் மாறியதால் பிராணபத்தான நிலைமைக்கு நீ இலக்காகினை. இச்சமயம் நீ இங்கு இருக்கவேண்டாம் வா" என்று கூறி அழைக்க, அந்நாகமும் சின்னையன் அவர்கள் திருவடிகளில் வீழ்ந்து புரண்டு விளையாடிற்று. சிவப்பெரியார் சிரித்த வண்ணமே அதனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய் ஊருக்கு வெளியில் திறந்த காட்டில் விட்டுத் திரும்பினர்.

### காளைமாடு குத்தியதும் - கயிலாயம் சென்றதும்

செல்வரும், சிவநேசருமாகிய சின்னையன் அவர்கள், வெகு நாளாக அழகும், அமைப்பும், கம்பீரத் தோற்றமும் நிரம்பிய வெண்ணிறக்காளை மாடொன்றை அன்புடன் வளர்த்து வந்தார். அவர் தம் வாழ்நாளில் வாஞ்சை வைத்தது அந்தக் காளைமாடு ஒன்றினிடத்திலேதான். அந்த வாஞ்சைக்குக் காரணம், தான் வழிபடும் சிவபெருமான் வாகனமாகிய நந்தியின் இனமாயிருப்பதனலென்க. அந்த வெண்ணிற இடபத்தை காணும்போதெல்லாம் சின்னையன் அவர்களுடைய திருமனத்தில் நந்திதேவருடைய தோற்றம் உருப்பெற்று நிற்கும். அந்தக் காளையை தினந்தோறும் நீராட்டுவித்து, மலர்மாலை கட்டி வணங்குவர். நைவேத்

தியப் பொருள்களை அதற்கு ஊட்டுவர். அந்த வெள்விடை மேய்ச்சல் நேரம் நீங்க, மற்ற நேரங்களில் அவரை விட்டுப் பிரியாமல் இருந்தது. அவர் தூங்கினால், அந்த இடபமும் அவருடைய படுக்கைக்கு அருகிலேயே படுத்துக்கொள்ளும். இங்ஙனம் அந்த வெண்ணிறக் காளையை சின்னையன் தன் கண்ணுள் மணியாய், உயிரினும் உயர்வுடையதாய் மதித்து வளர்த்து வந்தார்.

தனது ஆஸ்திகள் முழுவதையும் தன் குமாரர்களுக்குச் சரியாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு குடும்ப காரியங்கள் அனைத்தும் அவர்களிடத்தில் ஒப்புவித்துவிட்டார். தன் மூத்த குமாரரான ராசியண்ணரும், தன் தந்தையாரைப்போல் தெய்வ வழிபாட்டிலும், தேவாலயத் திருப்பணிகளிலுமே தன் கவனத்தை செலுத்தி வந்தார்.

இதனால் சின்னைய பூபதி தமக்கு யாதொரு கவலையுமின்றி எந்த நேரமும் இறைவனைத் தொழுவதுவும், தியானத்திலிருப்பதுவும், வெண்ணிறக் காளையைப் பாதுகாப்பதுமே நித்தியத் தொழிலாயிருந்தது. வயது ஏற ஏற அவருக்கு உலகப் பொருள்களில் வெறுப்பு மிகுந்து வந்தது. அடிக்கடி இந்த உலகத்தையே மறந்து தியானத்திலிருந்து தம்முன் கூடும் நிர்மலானந்தத்தில் சொக்கியிருப்பர். அங்ஙனம் அவர் தியான சமாதியில் பல நாழிகையளவும், பல நாட்கள் கணக்காகவும் இருப்பதுண்டு.

முற்றும் உணர்ந்து பக்தி மிகுதியாய் சின்னையன் அவர்களுக்கு எல்லா உயிர்களும் இறைவன் சொரூபமாகத் தோன்றின. ஒரு நாள் இரவு நெடுநேரம் தியானத்திலிருந்து சயனித்துக்கொண்டிருந்தார். அன்றிரவு அவருடைய கனவில் ஞானசிரியர் தோன்றி "அன்பனே! உனக்கு வயது எழுபத்திரண்டு, நாளைப் பிற்பகலில் முடிவு பெறுகிறது. கயிலைக்கிறைவராகிய உமாபரமேச்சுவரர் உனது மெய்யன்புக்கு மகிழ்ந்து நந்திதேவர் மூலமாக உன்னைத் தம்மிடத்துக்கு அழைத்துக்கொள்வர்" என்று கூறி மறைந்ததாகக் கனவு கண்டு, துயிலெழுந்து, இறைவன் இன்னருளைச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

மறுநாள் மேலைச் சிதம்பரமாகிய திருப்பேரூரில், ஸ்ரீ ஆனந்த நடராசர் திருவாதிரைத் திருவுலாத் திருநடன தரிசனந் தரும் காலமாயிருந்தது. அத்திருவுலாவைக் கண்டு களிக்க, தமது புதல்வர், தம்மிடம் வந்து தாங்கள் நடராசர் தரிசனங் காணப் பேரூர் சென்றுவர உத்திரவு தரவேண்டுமென்று வேண்டியதோடு, தம்மையும் உடன் வரும்படி அழைத்தனர். சின்னையன் அவர்கள் தமது மைந்தர்களுடைய அன்பிற்கு மகிழ்ந்து அவர்களைநோக்கி, “நாளைக்கு நாம் அக்கயிலைநாதரைச் சென்று தரிசிக்கின்றோம். நீங்கள் இன்று திருப்பேரூர் சென்றுவாருங்கள்” என்று விடை கொடுத்தனுப்பினர்.

அங்ஙனம் அவர்கள் சென்றபின், அன்று பகல் சின்னையன் அவர்கள் இரவு தாம் கண்ட சொப்பனத்தைச் சிந்தித்துக் கொண்டே தம்து பேரன்பிற்குரிய இடபத்தைத் தேடிக்கொண்டு தோட்டத்திற்கு வந்தார். அந்த இடபம் சிறிது தூரத்திலுள்ள ஒரு மூலையிலிருந்து ஆர்வத்துடன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது தமக்கெதிரில் ஆகாயத்தில் புதியதொரு தோற்றத்தைக் கண்டு அதிசயித்து நிமிர்ந்து நோக்கினர். திருக்கயிலாய மலையில், அண்ணல் சிவபெருமானது திருவாயில் காக்கும் திருநந்தி தேவருடைய திருவுருவக் காட்சி தோன்றிற்று. அக்காட்சி மேலும் மேலும் போற்றிப் புகழத்தக்க பல்வேறு பரமானந்தக் காட்சிகளாய் மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தது. அத்தெய்வக் காட்சியில் சின்னையன் அவர்கள் ஈடுபட்டு பாடியும், ஆடியும் பரமானந்தப் பரவசமடைந்துக்கொண்டிருந்தார்.

அதுதருணம் தாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தன் வெண்ணிற இடபம் அண்ணாந்தாளிட்டபடியே தம்மருகில் வந்து நின்றதை உணர்ந்தார். உடனே அதனுடைய அண்ணாந்தாளை அவிழ்த்துவிட எண்ணி குனிந்து கயிற்றை அவிழ்த்தார். அந்த சமயத்தில் ஆகாய வெளியில் அவர் கண்களுக்குமட்டும் தேவ கணங்களோடு காட்சி தந்துகொண்டிருந்த திருநந்தி தேவர் அந்த இடபத்தினிடத்தில் தோன்றி, அவ் வெண்விடையின் கூரிய கொம்புகளால், சின்னையன் அவர்கள் அடி வயிற்றில் ஊடுருவும் படி செலுத்தி, மேலே வாரித்தூக்கி உயரத்தில் நிறுத்தி அசைத்

தருளினர். அந்த அசைவினுல், சிவபக்தராகிய சின்னையன் அவர்கள், சகலலோக சரண்யனும், உபநிடதங்களின் உச்சிப் பொருளாயிருப்பவனுமான சர்வேச்சுவரனைச் சிந்தித்தவாறே, தமது பூத உடம்பினின்றும் பெயர்ந்து, நந்திதேவருடன் திருக் கயிலாயம் சென்று, ஒப்பற்ற இறைவன் திருவடிநிழலையடைந்து என்றும் மாருத பேரின்ப வாழ்வைப் பெற்று இனிது வீற்றிருந்தார்.

சைவப் பெரியார் சின்னையன் அவர்கள் திருக்கயிலைச் சென்ற காலம், கலியுகம் 4951-ஆம் வருஷம் சௌமிய ஆண்டு மார்கழி மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமை திருவாதிரை நக்ஷத்திரம் மாலை, அதாவது சூரியாஸ்தமனத்திற்குமுன் இக் கணக்குப்படி ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன் அவர்கள் சிவபெருமான் திருவடி நிழல் அடைந்து இன்றைக்கு சுமார் தொண்ணூற்று ஐந்து (95) ஆண்டுகளாகின்றன.

சின்னையன் அவர்கள் சிவலோகம் சென்றபின் அவருக்கு உலக வழக்கத்தை யொட்டிச் செய்யவேண்டிய சீரனைத்தும் மக்களும், உற்றுரும், ஊரார்களும் ஒன்று கூடி வெகு சிறப்பாகச் செய்து திருமயானத்திற் கெடுத்துச் சென்று தீயிட்டு, நீருக்கி, நீர்க்கடன் முதலியன விதிப்படி நிறைவேற்றினுர்கள்.

**பண்ணையாள் கனவில் தோன்றிக் கட்டளையிட்டது.**

கொங்கு நாடு புகழ் பெருகவும், குவலயம் போற்றிக் கொண்டாடவும், சைவந் தழைக்கவும், கயிலை அடைந்த காருண்யர், சின்னையன் அவர்களுக்கு மூன்றுண்டுக்கு அப்பால், உலகத்து மக்கள் உஜ்ஜீவிக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் உதயமாக, தமது ஞானுசிரியர் தமக்கு உபதேசத்தருளிய "விஷ நோய் நிவாரண மந்திர சக்தி" மண்ணுலகில் பரவிப் பயன் பெறவும் எண்ணி அதனை அன்பு கூர்ந்து தமது தோட்டத்துப் பண்ணையாள் ஒருவன் கனவில் தோன்றி அறிவித்தனர். அது:—

அன்பனே! சாமளாபுரத்திற்கு மேற்கில் தென் வடலில் ஓடிக்கொண்டிருக்கும் நொய்யலாற்றின் கரையில், தர்ப்பைப்புதர் ஒன்றிருக்கிறது. அப்புதருக்கு ஒருமுழம் கீழ்ப்புறத்தில்

மணலுக்குள் "சுயம்புலிங்கம்" ஒன்றும், அவ்வாற்றின் தென் கரையில் பெரியதொரு கொளஞ்சிச் செடியின்கீழ் பூமிக்குள் நந்தி யுருவக் கற்சிலையொன்றும் இருக்கின்றன. இவற்றை, நீ இராசி யண்ணனிடம் அறிவித்து அந்த லிங்கத்தையும், நந்தியையும், நமது பெருந்தோட்டத் துலைக்கிணற்றிற்குத் தென் மேற்கில் செழுமை யாக வளர்ந்திருக்கும் கிளுவை மரத்தின் அடித்தலத்தில் பிரதிட்டை செய்து, கிரமந்தவறாமல் நாள்தோறும் காலை மாலை களில் பூசித்து வரும்படி நாம் கட்டளையிட்டதாகச் சொல். அங்ஙனம் செய்தால், அவ்விடத்தில் அருளும், அற்புதமும், மகிமையும், தெய்வத்தன்மையும் சிறந்து விளங்கும். பல்லாயிர மக்கள் பயன் பெறுவர். கோரிக்கைகள் நிறைவேறும்."

இவ் விவரங்கள் அனைத்தையும், அப்பண்ணையாள் விடிந்ததும் விரைந்தோடி தன் எஜமானர் இராசியண்ணனிடத்தில் விளங்கக் கூறினான். அவற்றை அதிசயத்துடன் கேட்டு மகிழ்ந்த இராசி யண்ணன், அக்கணமே தனது சகோதரர்கள், உற்றார், ஊரார் களுடன் நொய்யல் ஆற்றின் கரை சேர்ந்து குறிப்பிட்ட இடங் களில் சுயம்புலிங்கமும், நந்தி உருவமுமிருக்கக்கண்டு, தெய்வத் திருவருளையும், சிவனடியார் சின்னையன் அவர்களது அருள் மொழியையும் மிக மிகப் பாராட்டி, அவைகளை எடுத்துச்சென்று, அய்யன் அவர்களால் அருமையாக வளர்க்கப்பட்ட கிளுவை மரத்தின் கீழ் வெகு சிறப்புடன் பிரதிட்டை செய்தனர். உடனுக்கவே சுயம்புலிங்கத்திற்கு வலது பக்கத்தில் விநாயகரையும் கோவில் கொள்ளுவித்து நாள்தோறும் பூசை செய்து வந்தனர். அன்று முதல் அவ்வாலயத்திற்கு "வாழை தோட்டத்து அய்யன் கோவில்" என்று பெயர் வழங்கப்பெற்று எல்லாராலும் பிரபலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இக்கோவில் ஏற்பட்டு இன்றைக்கு தொண்ணூற்றிரண்டு ஆண்டுகளா கின்றன.

காலக்கிரமத்தில் இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் "வாழைத் தோட்டத்து அய்யன்" என்கிற தெய்வத்தின் திருவருளால் ஆங்கு அரிய செயல்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. நிகழ்ந்துகொண்டும் வருகின்றன.

## அய்யன் கோவிலும்—ஆங்கு நிகழ்ந்த மகிமையும்

### 1. புற்று வளர்ந்ததும்—மண் மருந்தானதும்

அய்யன் ஆலயத்தில் சிவலிங்கம் எழுந்தருளப்பெற்ற சில வாரங்களுக்குப்பிறகு கிளுவை மரத்தின் தென்புறத்தில் மண் புற்றொன்று வளர்ந்தது. அது விஷ நோய்களுக்குச் சஞ்சீவியாய் விளங்கிற்று. அவ்வதிசயத்தைக் கண்ட இராசியண்ணன், அத்தோற்றம், தெய்வ தோற்றம் என மதித்து, அப்புற்று அழிவு அடையாதபடி பாதுகாத்து வந்தான். ஒருநாள் அங்கு விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களுள் ஒருவனுக்கு, சிறு பாம்புக்கடியால் தேகமுழுதும் தடிப்பு ஏற்பட்டுத் துன்பப் பட்டான். அவ்வாலயத்துள் வளர்ந்திருந்த புற்று மண்ணை யெடுத்து நீரில் குழைத்து உடம்பில் பூசினால் நோய் நீங்கும் எண்ணந் தோன்ற, அவன் அப்படியே செய்ய, விஷக்கடி மறைந்தது. அது முதல் யாவரும் அம்மண்ணை நன் மருந்தாக மதித்து விஷக்கடிகளுக்கு உபயோகித்தனர்.

### 2. பாம்பு கடித்ததும்—புற்றுமண் பூசி விஷம் இறக்கியதும்

சின்னையன் அவர்களுக்குப் பேரன் முறையான "கோவிந் தப்பன்" என்பவன் பாம்பால் கடியுண்டு பல மாந்திரீகர்களால் மந்திரிக்கப்பெற்றும் விஷம் இறங்காததனால், அவன் அய்யன் ஆலயத்தை அடைந்து, இலிங்கத்தின் முன்னின்று, "தாத்தா! எனது தேகத்தில் ஏறியுள்ள விஷத்தை இறக்க மந்திரவாதிகளால் கூடவில்லை. தங்களையே முழுதும் நம்பித் தஞ்சமென்றடைந்தேன். தாங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்." எனப் பிரார்த் தித்து புற்று மண்ணையொடுத்து, நீரில் குழைத்து உடம்பில் பூசிக் கொண்டு அக்கோவிலின் முன் மயக்கமுற்று படுத்துக் கிடந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் விஷம் இறங்கப்பெற்று, பூரண சுகமடைந்து எழுந்தான். அதுமுதல் யாவரும் விஷக்கடி களுக்கு அப்புற்று மண்ணையே பூசி பூரண சுகம் பெற்று வருகின்றனர்.

### 3. சக்கிலியனும்—சர்ப்பமும்

மாமிசம் புசிக்கும் சக்கிலியன் ஒருவன், ஒருநாள் அய்யன் ஆலயத்திற்கு அருகிலுள்ள கிணற்றில் ஏற்றம் இறைத்துக்கொண்

டிருந்தான். அப்போது அக்கிணற்று வாரியில் அவன் ஏற்றம் இறைக்க இயலாதவாறு நாகச்சர்ப்பமொன்று படமெடுத்துச் சீறி அவனை வெருட்டிற்று. அவன் மிகப் பயந்து தனது ஆண்டை இராசியண்ணனிடம் முறையிட்டான். கோ மாமிசம் புசிக்கும் ஒருவனை ஆலயத்தினருகில் நீர் இறைக்கச் செய்த குற்றமே பாம்பு விரட்டியதற்குக் காரணம் என்றுணர்ந்து, உடனே அவனை விலக்கி மாமிசம் புசியாத மற்றொருவனை நீர் இறைக்கச்செய்யவே, அக்கணமே அப்பாம்பு மாயமாய் மறைந்தது. அவ்வதிசயத்தை அறிந்த இராசியண்ணன், அய்யன் மகிமையைப் புகழ்ந்து, அன்று முதல் மாமிசம் புசிப்பவர்களை அவ்விடத்தில் அணுகாதவாறு செய்தனர்.

### 4. திருமதிலைப் புதுப்பிக்க முயன்றதும்—பாம்புகள் பயமுறுத்தியதும்

பின்னொருசமயம், வாழைத்தோட்டத்து அய்யனுடைய திருக்கோவிலின் திருமதிலைப் புதுப்பிக்க நினைத்த இராசியண்ணன் சில ஆட்களை விட்டு, வேலை தொடங்கும்படி உத்திரவு செய்தான். அதன்படி அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கையில், ஒருநாள் அவர்கள் மாமிசம் புசித்துவிட்டு, திருமதிலின் உட்புறத்தில் வேலை செய்துகொண்டிருந்தனர். அதுசமயம் அவர்கள் கண்களுக்கு எங்கும் பாம்பாகவேயிருந்தது அவைகள் அவர்களைக் கடிக்க சீறி வருவதைக்கண்டு அலறி ஓடி இராசியண்ணனிடம் அறிவித்தனர். அவன் வந்து பார்க்க பாம்புகள் காணப்படவில்லை. மறுபடியும் அவர்களை வேலையைத் தொடங்குமாறு இராசியண்ணன் சொல்லவே, ஆட்களும் வேலைசெய்ய ஆரம்பித்தனர். முன் போலவே பாம்புகள் மீண்டும் சீறி வருவதைக் கண்டு ஓடினர். இராசியண்ணனுக்கு யாதுந் தோன்றாது, நெடுநேரம் மயங்கி, பிறகு வேலையாட்களை விளித்து, "நீங்கள் இன்று என்ன உணவு உட்கொண்டீர்கள்?" என்று கேட்க, அவர்கள் "மாமிசம் புசித்தோம்." என்றார்கள். மாமிசம் புசிப்பவர்கள் ஆலயத்துள் நுழைவதற்கு விலக்கானவர்களாதலால், அவர்களை விலக்கி, ஆலயத்தை சுத்தி செய்து வேறு ஆட்களைக்கொண்டு கோவில் திருப்பணியை முடித்தனர்.

**5. தீட்டுடையோன் திருவிளக்கேற்றத் துணிந்ததும்— தீ நாகம் துரத்தியதும்**

மற்ருெரு நாள் மாலை நேரத்தில் இராசியண்ணன் வாழைத் தோட்டத்து அய்யன் ஆலயத்து முன் முகப்பில் அமர்ந்து சில மனிதர்களுடன் சந்தோஷமாக உறையாடிக்கொண்டிருந்தான். அது சமயம்; அய்யன் அவர்களுடைய கடைசிப் புதல்வன் "முத்துசாமி" என்பவன் வழக்கம்போல் அன்று கிண்ணத்தில் எண்ணெய்வார்த்து எடுத்துக்கொண்டு, ஆலத்துள் நுழைந்து திருவிளக்கேற்றத் துணிந்தான். என்றுமில்லாத அன்று பெரியதொரு கருநாகம் படம் விரித்துச் சீறி அவனை எதிர்த்து வந்தது அது கண்டு அஞ்சி நடுங்கிய அவன், அலறிக்கொண்டே வெளியே ஓடிவந்தான். அப்பொழுது அங்கு வீற்றிருந்த இராசியண்ணன் விஷயத்தை அறிந்து "தம்பீ! இன்று வீட்டில் ஏதேனும் விசேஷமுண்டா?" என்று வினவினன். அவன் "அண்ணு! வீட்டில் இன்று எனக்குக் குழந்தை பிறந்திருக்கிறது" என்ருன். தமையன், "தம்பீ! குழந்தை பிறந்து தீட்டுண்டா யிருக்கிறபோது நீ திருக்கோவிலுள் நுழைந்து நீ திருவிளக் கேற்றத் துணியலாமா? கவனியாத குற்றத்தினுல்தான் உனக்கு இந்த சோதனை உண்டாயிற்று. தீட்டுத் தீரும் வரையில் வேருெருவரைக்கொட்டு தீபம் எற்றச் செய்" என்று எடுத்துக் கூறினன். அப்படியே செய்ய, பாம்பு தென்படவில்லை. அய்யன் செயலை யாவரும் அறிந்து கொண்டாடினர்.

**6. சாமளாபுரம் சிவன் கோவில் ஜீர்ணோத்தாரணம்**

சாமளாபுரம், அய்யன்பாளையத்திற்கு வடமேற்கிலுள்ள பழமையான தொரு சிவஸ்தலம். அத்தலத்தில் திருக்கோவில் கொண்டு விளங்கும் சிவபிரானது பெயர் "சோழீச்சுவரதேவர்" என்பது. அய்யனுக்கும், அம்மைக்கும் தனித்தனியாக திருக் கோவில்கள், கொங்குச் சோழர்களில் "வீர சோழன்" என்பவனல் கட்டுவிக்கப்பட்டது. அந்த ஆலயங்கள் சாமளா புரத்தை யடுத்த பத்துக் கிராமத்தார்களது ஆதீனத்திற்குட்பட் டிருந்தன. அச்சிவன் கோவில் மிகவும் பழுது பட்டுப் புதுப்பிக்க வேண்டிய நிலையிலிருந்ததனல், சிவபக்தி மிக்க இராசியண்ணருக்கு மட்டும் அவ்வெண்ணந் தோன்ற பத்துக் கிராமத்தாருடன்

கலந்தாலோசித்து முடிவு செய்ய, சாமளாபுரத்தில் ஒரு கூட்டம் கூட்டினன். யாவரும் ஒன்று கூடிப்பேசியும் ஒற்றுமையில்லாத தனல் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ஒரு முடிவும் இல்லாமலே கூட்டம் கலைந்தது.

அரும்பாடுபட்டுக் கூட்டிய பெரியதொரு கிராமக் கூட்டம் யாதொரு முடிவுமின்றிக் கலைந்ததனல், இராசியண்ணன் மனம் நொந்து பெருங்கவலையுடன் வீடு சென்று உறங்கினன். அன்றிரவு அவனுடைய சொப்பனத்தில் அய்யன் தோன்றி "அன்பனே! வருந்தவேண்டாம். நினது எண்ணத்தை நாம் நிறைவேற்றுகின்றோம்" என்று கூறி மறைந்தனர். இராசியண்ணன் மகிழ்ந்தெழுந்து தனது காலைக் கடன்களைச் செய்துக் கொண்டிருக்கையில், தனிகரும், கனவானுமான பெரியவர் ஒருவர் வந்து "பத்து கிராமத்தார்களும் என்னிஷ்டப்படி நடக்கச் செய்கிறேன் என்னுடன்வா" என்று இராசியண்ணனை சாமளாபுரம் அழைத்துக் கொண்டுபோய் மீண்டும் ஒருதரம் கூட்டம் கூட்டுவித்து அனைவரையும் ஒருமுகமாகச் சம்மதிக்கும்படி செய்து மறைந்தனர்.

நல்லதொரு நாளில் சிவன்கோவில் திருப்பணி தொடங்கப் பெற்று, கிராமத்தாரின் ஆதரவில், இராசியண்ணன் அவர்களால் இனிது முடிக்கப்பெற்று கும்பாபிஷேகமும், சிறப்பாக நிறைவேறிற்று.

### 7. விஷ்ணு கோவில் கொடிக்கம்பம் நாட்டும் திருப்பணி

சிவன் கோவில் திருப்பணி நிறைவேறிய பிறகு அச்சாமளாபுரத்தில் கோவில் கொண்டு விளங்கும் வரதாராஜப் பெருமாளுக்கு கொடிக்கம்பம் ஒன்று நிறுத்தவேண்டியிருந்தது. சாமளாபுரத்திற்குக் கீழ்திசையிலுள்ள "கொங்கணகிரி" என்னும் வேலாயுத சாமி மலையில் பிளந்து எடுக்கப்பெற்ற பெரியதொரு கற்றூணை பெரிய வண்டியைக் கொண்டுவந்து, அவ்வண்டியில் அத்தூணை ஏற்றி ஆயிரம் பேர்கள்கூடி இழுத்துக்கொண்டு வருகையில், திரளான ஜனக்கூட்டத்தால் நெருக்குண்ட மூவர், வண்டிச் சக்கரங்களில் சிக்கி உயிர் இழந்தனர்.

113983

அவ்வபாயங்கண்டு அஞ்சிய ஜனங்கள் வெருண்டனர். வண்டி உருளைகளில் அகப்பட்டு மாண்டவர்களின் மரணத்தைப் பற்றி துரைத்தனத்தாருக்கு அறிவிக்கப்பட்டது. இதனால் பெரிய குடித்தனக்காரர்கள் விசனமடைந்து சர்க்கார் உத்தரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அன்றிரவு திருவாதிரை நட்சத்திரம் சிவச் செல்வர் சின்னையன் அவர்கள் குருபூசை நாள். அதனை இராசியண்ணன் முதலானவர்கள் சுருக்கமாக முடித்துவிட்டு துரைத்தனத்தாரின் உத்திரவு யாதாயிருக்குமோ? என்ற வியாகூலத்தினல் ஏங்கிய வாறே உறங்கிக் கொண்டிருந்தனர். அவ்விரவு இராசியண்ணன் கனவில் அய்யன் தோன்றி, "குழந்தாய்! இறைவனருளால் எல்லாம் இனிது முடியும்" என்று கூறினர்.

அதுசமயம் பல்லடம் தாசில்தாரயிருந்தவர் "வெங்கடாசலம் பிள்ளை" என்னும் கனவான். அவருடைய சொப்பனத்தில் கடவுள் ஓர் அடியவரைப்போல் தோன்றி "அன்பனே! நமது கோவில் கொடிக்கம்பத்திற்காகக் கொங்கணகிரியிலிருந்து கொணர்ந்த கற்றூண், வண்டியில் வைத்து இழுத்து வரும்போது அசதியால் வண்டிச் சக்கரங்களில் மூவர் சிக்கி இறந்தனர். அது பற்றி யாரையும் குறை கூறுவதற்கில்லை. அது தெய்வ நிகழ்ச்சி. அம்மரணத்தைப்பற்றி நாளைக்காலையில் உமக்குத் தகவல் வரும். அவ்விஷயத்தில் யாதும் ஆட்சேபங் கூறுமல் உடனின்று நமது காரியத்தை நிறைவேற்றி வைக்கவும்" என்று கூறியதாகக் கண்டு காலையில் எழுந்ததும் தாம் கனவில் கண்டவாறு சாமளாபுரம் கிராமாதிகாரியின் கடிதம் வந்திருப்பதைக்கண்டு கடவுள் செயலுக்கு வியந்து, அக்கடிதத்திலேயே மற்றொரு பக்கத்தில் "தமக்கு அந்த மரணங்களைப்பற்றி யாதொரு சந்தேகங்களுமில்லை. தெய்வ காரியம் தடையின்றி ஒழுங்காக நிறைவேறட்டும்" என்று எழுதியனுப்பினர்.

அந்தக்கடிதம் கிராமாதிகாரிக்குக் கிடைத்ததும், எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. அனைவரும் அச்சம் நீங்கினவர்களாகிக் கடவுளைப் புகழ்ந்து மாண்டவர் மூவர் தேகங்களையெடுத்து தகனம்

செய்துவிட்டு அக்கற்றூண் வண்டியை நான்கு நாட்களில் சாமளாபுரம் இழுத்துச்சென்று, திருமால் திருச்சன்னதியின் முன் நாட்டி பூசை முதலியன நிறைவேற்றினர்.

**8. கதலித்தோட்டத்து அய்யனை கதியென்று நம்பிப் பூசித்ததும் கண்ணொளி பெற்றதும்**

வேறொரு சமயம், சூலூருக்கடுத்த ஓர் சிற்றூரிலிருந்த பெருங் குடித்தனக்காரர் ஒருவருக்கு கண்ணொளி திடீரென மழுங்கி அதனால் பெரிதும் வருந்தித் துன்புற்றனர். வாழைத் தோட்டத்து அய்யன் மகத்துவத்தை கேள்வியுற்ற அவர், அய்யன் கோவிலை அடைந்து அங்கிருந்த சாவடியில் தங்கி அய்யனே கதியென்று நினைத்து, பக்தி சிரத்தையுடன் பூசித்து வந்தனர். அவர் சில நாட்கள் இவ்வாறிருக்க, இராசியண்ணன் ஒரு நாள் அவர் விஷயம் கேட்டறிந்து அவரை நோக்கி, ஐயா! அய்யன் கோவிலில், விஷகடிகள் சம்மந்தமான நோய்கள்தான் தீருகிறதே யல்லாமல் கண்ணொளி பெறுவதற்கு இங்கு காத்திருப்பதில் பயனில்லை" என்று பணிவுடன் கூறினன். அதுவரையில் தன் கண்ணொளி குணமாகுமென்று முழு நம்பிக்கைக் கொண்டிருந்த அக் குடித்தனக்காரர், மெத்த வருந்தி, அன்றிரவு வாழைத் தோட்டத்து அய்யனை உளம் நெகிழ வெகு உருக்கத்துடன் தோத்தரித்து விட்டு, உறங்கினன். அன்பர்க் கெளியனாகிய அய்யன் அவர்கள் அவனது கனவில் தோன்றி, "அன்பனே! அஞ்சேல், இதுமுதல் ஒன்பது நாட்களில் உனது கண்கள் முன்போல் ஒளிபெறும்" என்று கூறி மறைந்தனர். அக் குடியானவர், அதிசயித்து எழுந்து தான் இரவில் கண்ட சொப்பனத்தை இராசியண்ணனிடம் தெரிவித்து, முன்னிலும் பன் மடங்கு பக்தி சிரத்தையுடன் பூசித்து வந்தான். அய்யன் கனவில் அருளியபடியே, ஒன்பதாம்நாள் காலையில், அவர் படுக்கையிலிருந்து எழும்போதே கண்ணொளி வரப்பெற்று எழுந்திருந்தான் அவர் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் அளவேயில்லை. மறுநாள் அய்யனுக்கு விசேஷமாக அபிஷேக ஆராதனைகள் செய்து ஏழைகட்குத்தானம் வழங்கி பெருங்களிப்புடன் தம் ஊர் சென்றார்.

## 9. மந்திரவாதியின் மமதையும் மகான் அய்யன் அவர்களைத் துவேஷித்துப் பேசியதால் பட்ட அவதியும்

நொய்யல் ஆற்றுக்கு அருகிலுள்ள "செங்கத்துரை" என்று கிராமத்தில் மாந்திரீக சக்தியில் கைதேர்ந்த "அத்தாண்டி" என்ற பண்டாரம் ஒருவன் இருந்தான். அவன் மந்திர சக்தியால், சகல நோய்களையும், விஷக்கடிகளையும் பூத பைசாச தோஷங்களையும் போக்கி வந்தான். இவற்ருல் அவனுக்கு மதிப்பும், செல்வாக்கும் ஊரில் உயர்ந்திருந்தன. மாரணம், பேதனம் முதலானவற்றிலும் அவன் சித்திபெற்று அனைவரையும் மிரட்டி வந்தான். அவன் மித மிஞ்சிய கர்வம் கொண்டு ஜன சமூகத்துள் நிகழ்த்திய அட்டூழியங் கள் கணக்கிலடங்கா. ஒருநாள் அவன், வாழைத்தோட்டத்து அய்யன் கோவில் கொண்டிருந்த இடத்திற்கு ஏதோ காரியமாக வந்திருந்தான். அப்போது அங்குள்ள விநாயகர் கோவிலில் சிலர் கூடி அய்யனவர்களின் அளப்பறிய மகிமைகளைப்பற்றி, புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவற்றைக்கேட்ட அத்தாண்டி மனம் பொருமல், அங்கிருந்தவர்களை நோக்கி மிகுந்த கர்வமானச்சொற் களில் "நீங்கள் மனமாறப்புகழும் அந்த அய்யன் என்பவனை நான் ஏவியவாறு எனக்கு ஊழியம் செய்யவும், நீங்கள் தெய்வமாகக் கொண்டாடும் அவனை, இந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்து ஓடும் படி விரட்டவும் எனக்குப் போதிய வல்லமை உண்டு," என்று கூறி ஏளனம் செய்தான்.

அந்த தூஷணைகளைக் கேட்ட சிலர் அவனை நையப்புடைக்க துணிந்தார்கள். அக்கூட்டத்திலிருந்த பெரியவர் ஒருவர் அவர்களை சமாதனப்படுத்தி "புல்லர் தம் சொல்லுக்கஞ்சி பொறுத் தனர் பெரியோர் என்றும் நல்லதென்றிருக்கவேண்டாம். நஞ் செனக் கருதலாமே என்ற ஆன்ருேர் அமுத மொழியை நீங்கள் கேட்டதில்லையா? தெய்வ சாபத்தின் சோதனைக்கு அவன் வெகு விரைவில் ஆளாவதைக் காண்பீர்கள்" என்று கூறினர்.

அத்தாண்டியும், அங்கிருந்த அனைவரையும் தான் அவமதித்து விட்டதாக எண்ணி, மிகுந்த கர்வத்துடன் தன்னூர் சென்ருன்.

இது நிகழ்ந்த முப்பது நாளைக்கப்பால் அந்த மாந்திரீக அத்தாண்டியின் ஏக புதல்வனை பாம்பு கடித்தது. அவன் தனது மந்திர சக்தியெல்லாம் பிரயோகித்துப் பாடம் போட்டு விஷம்

இறங்காமல் வேதனையே மிகுந்தது. பாம்பு கடித்தவர் பற்பலரு டைய விஷத்தை விரைவில் போக்கடித்த அவன், தன் புதல்வன் விஷயத்தில் தோல்வி பெற்றதற்குப் பெரிதும் நாணி வருந்தினன்' தான் நெடுநாள் தவமிருந்துப் பெற்ற தனிப்புதல்வன், அவரால் கடியுண்டு ஆவிசோர்வதை அவனல் பொறுக்கக்கூடவில்லை. ஒன்றுந் தோன்ருத உன்மத்தன் போலாயினன். அவனது நிலையைக் கண்ட சிலர், "ஐயா! நீர் சென்ற மாதம் வாழைத் தோட்டத்து அய்யன் அவர்களைப் பலவாறு ஏசினீர், அக் குற்றத் தினலேயே உமது மந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. உமது புதல்வன் பிழைக்கவேண்டுமென்ற விருப்பம் உமக்கிருந்தால் அய்யன் ஆலயத்திற்கு இவனை எடுத்துக்கொண்டு போய் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டுவீராயின் சுகம் பெருவீர்.', என்று கூறினர்கள். அப்பொழுது அவனுக்கு அந்நினைவு தோன்றி தனது அறியாமைக்குப் பெரிதும் நொந்து புலம்பினன். அவர்கள் கூறியவாறே அவன் தன் புதல்வனை ஒரு வண்டியி லேற்றிக்கொண்டு அய்யன் ஆலயமடைந்து, அய்யன் அவர்களைப் பலவாறு துதித்து வேண்டியும், புதல்வன் விஷம் நீங்கப்பெற வில்லை. பிறகு அவன் அளவற்ற துக்கத்துடன் தனது குமாரனை சன்னதியில் கிடத்தி, தான் அறியாமையால் செய்த பெரும் பிழையைப் பொருத்தருள வேண்டுமென்று பெரிதும் குறையிரந்து அய்யனை வேண்டி அதே நினைவுடன் துயின்ருன். தீனபந்து வாகிய அய்யனவர்கள் அவன்பால் இரக்கம் கொண்டு அவனது கனவில் தோன்றி "அத்தாண்டி! நீ பலகோடி மந்திரங்களைக் கற்றும், மானிலத்து மக்களுக்கு உபகாரம் செய்யாமல் அபகாரம் செய்தாய். இனிமேலாவது ஜனோபகாரமான மந்திரங்களை கைக்கொண்டு மக்களுக்கு நன்மையே புரிவதாக உறுதி கூறுவாயாகில், உனது குமாரன் உயிர் பிழைக்கச் செய்வோம்" என்று கூறியதாகக் கண்டு விடிந்ததும் விரைந்தெழுந்து அய்யன் ஆலயத்துட் சென்று, பணிந்து சன்னதி எதிர் நின்று, "சொப் பனத்தில் கட்டளையிட்டவாறே செய்கிறேன். தவறுவதில்லை" யென்று உறுதி கூறியதும் அவன் குமாரன் தூங்கி யெழுந்த வனைப்போல் எழுந்தான், அது கண்டு வியந்த அத்தாண்டி, தனது பேதைமையும், கர்வத்தையும் மிக நொந்து அய்யன் அவர்களுக்கு மிகுந்த பக்தி சிரத்தையுடன் சிறப்பாக அபிஷேக அலங்காரங்கள்

செய்து பூசித்து, அய்யனுடைய அளப்பரிய மகிமைகளைத் தன் வாயாரத் தான் செல்லும் இடங்களிலெல்லாம் போற்றிப் புகழ்ந்து வந்தான்.

**10. துஷ்டனின் துணிச்சலும், தூரத்திய நாகமும்**

சமீப காலத்தில் நிகழ்ந்ததோர் செய்தியைக் கூறுகின்றோம்.

சுமார் பதினைந்து வருடங்களுக்குமுன் கோயமுத்தூர் வாசியான ஒரு மாது அய்யன் கோவிலுக்கு வருவதற்காக சோமனூர் ஸ்டேஷனில் ஒரு வாடகைவண்டி அமர்த்திக்கொண்டு தனிமையாக வந்தார். துன்மார்க்கனாகிய வண்டிக்காரன் அவளிடமிருந்த ஆபரணங்களை அபகரிக்க எண்ணங்கொண்டு பாதிதூரம் வந்ததும் நடுக்காட்டில் வண்டியை நிறுத்திவிட்டு அம்மாதுவை துன்புறுத்த எத்தனித்தான், வண்டிக்காரனிடம் தான் நிராதரவாய் அகப்பட்டுக் கொண்டதை நினைத்து வருந்தி பற்பல விதமாய் அய்யனவர்களைத் தோத்தரித்தும் வண்டிக்காரன் பலாத்காரம் செய்யத்தொடங்கினான். மாது அலறித் துடித்து அய்யனே கதியென்று நம்பி சோர்ந்து வீழ்ந்தாள். அதைக் கண்ட வண்டிக்காரன் அப்பெண்ணைக் கொன்று, அவள் நகைகளை அபகரிக்க அதுதான் தக்க சமயமென்று கருதி அருகாமையிலிருந்த ஒரு பெரிய கல்லை யெடுக்க, அதனடியிலிருந்து ஒரு பெரிய கருநாகம் சீறியெழுந்து அவனை விரட்டத் தொடங்கியது. அவன் அலறித்துடித்து ஓடிவந்து அம்மாது சிரோன்மணியின் கால்களில் வீழ்ந்து தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். அப்பொழுதுதான் தன் உணர்வு பெற்றெழுந்த அம்மாது அய்யனவர்களின் மகத்துவத்தை நேரில்கண்டு வியந்து, அய்யனவர்களை தோத்தரித்து, அக்கருநாகத்தைப் பார்த்து தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக்கோரும் வண்டிக்காரனை துன்புறுத்த வேண்டாமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ள அந்நாகமும் உடனே மறைந்தது.

**11. மாதுவின் மமதையும், மடியில் சர்ப்பம் கிடந்ததும்**

சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் நடந்த மற்றொரு சம்பவத்தை அறிவிப்போம்

கோயமுத்தூர் வாசியான ஒரு பெண் கோவிலுக்கு வந்தவள், சற்று நேரம் நின்று, அங்கு நடக்கும் நடவடிக்கைகளை கவனித்து

"இதென்ன கோவில்! எல்லோரும் பிரமாதமாய் பேசிக் கொண்டார்களே யென்று, வீண் செலவு செய்து கொண்டு இவ்வளவு தூரம் வந்தேன். இந்த கோவிலில் விக்கிரகங்கூட கிடையாது. கிளுவை மரத்தைப் பூஜை செய்துவிட்டு, வெறும் செம்மண்ணை அள்ளி அள்ளி எல்லோரும் பைத்தியக்காரத் தனமாய் பூசிக் கொள்ளுகிறார்கள்." என்று தன்னுடன் வந்தவர்களிடம் இகழ்ச்சியாகக் கூறி, தான் யாதொரு பூஜையும் செய்யாமல் கொண்டு வந்த பழங்களை நிவேதனம் செய்யாமல் தின்று விட்டு தேங்காயை உடைத்து கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மிகுதியை மடியில் கட்டிக்கொண்டு மனக் கசப்புடன் சோமனூர் திரும்பிச் சென்றாள். பாதி தூரம் சென்றதும் மடியில் கட்டியிருந்த தேங்காய் மூடிகள், சற்றுக் கனமாயிருப்பதாக ஒரு உணர்ச்சி அவளுக்குத் தோன்ற, அவள் மடியை விரித்துப் பார்த்தாள். தான் போட்டிருந்த தேங்காய் மூடிகள் மறைந்து ஒரு நாக சர்ப்பம் மடியில் மண்டலமிட்டுக் கிடப்பதைக் கண்ணுற்ற அவள் ஆவி சோர்ந்து, அலறித் துடித்து, தான் மகான் அய்யனவர்களின் மகிமையை அறியாது கண்டபடி பிதற்றி, ஸ்வாமி தரிசனம் கூட செய்யாமல் திரும்பி வந்து பெரிய அபசாரம் செய்து விட்டோமென்று வருந்தி, அய்யனைப் பலவாறு துதித்து தன்னை மன்னித்து காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டே மூர்ச்சையாயினள். சிறிது நேரம் கழித்து பார்க்க, தான் கண்ட சர்ப்பம் மறைந்து விட்டது. அவள் மிக வியப்படைந்து உடனே ஓடோடியும் வந்து அய்யனவர்களுக்கு சிறப்பாக பூசைகள் முடித்துவிட்டு ஊர் திரும்பினாள்.

**12. வெள்ளை நாகம் விளையாடுதல்**

சுவாமி மூலஸ்தானத்தில் ஸ்தல விருட்சத்தின்கீழ் வெள்ளை நாகம் ஒன்று விளையாடிக் கொண்டிருப்பதைச் சில பக்தர்கள் நேரில் கண்டிருக்கிறார்கள்.

**13. சன்னதியில் சங்கீத ஒலியும் தேவகானமும்**

அய்யனவர்களின் மகத்துவத்தை விளக்கும் பற்பல அற்புதங்கள் இன்றைக்கும் நிகழ்ந்து வருகின்றன. உதாரணமாக திரிகரண சுத்தியுடன் அய்யனை வழிபட்டு கோவிலில் தங்கும்

யாத்திரைவாசிகள், பக்தர்கள் அர்த்த ராத்திரியில் கோவிலுக்குள் ஆயிரக்கணக்கான மணியோசைகளுடன் பூஜை நடப்பது போன்ற சப்தங்களையும் செவிக்கினிய தேவ கானங்களையும் கேட்டு இன்புறலாம்.

**14. தீர்த்தம் வழங்குவதும், திரு நீறு பூசுவதும்**

விஷக்கடி, இன்னும் பற்பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு கோவில் சத்திரங்களில் தங்கிவரும் பிரார்த்தனைக்காரர்களிடம் மகான் அய்யன் நேரில் தோன்றி, தீர்த்தம் வழங்குவதும், புற்று மண் பூசி வியாதிகளைப் போக்குவதும், இன்றைக்கும் பிரத்தியக்ஷம்.

ஸ்வாமி தீர்த்தம் சுயமான நல்லெண்ணெயாக மாறியது, பிரசாதமாகிய புற்றுமண் சர்க்கரையாக மாறியது, இதுபோன்ற பற்பல அற்புதச் செயல்கள் நேரில் காணப்பட்ட விஷயங்களாகும்.

இங்ஙனம் நான் கூறிக் கொண்டே சென்றால் அய்யனுடைய மகத்துவங்கள் மென்மேலும் விரிந்து பெருகுமென்று அஞ்சி இம் மட்டில் நிறுத்துகின்றேன். எஞ்சியவற்றை அறிந்தார் வாய்க் கேட்டு மகிழ்க!

மகிமை மிக்க வாழைத்தோட்டத்து அய்யன் பெருமை காலக்கிரமத்தில் எங்கும் பிரசித்தம் பெற்று, தற்பொழுது கோயமுத்தூர் ஜில்லாவில் ஒரு முக்கியமான ஸ்தலமாக விளங்குகிறது. நெடுந்தூரத்திலிருந்து பக்தர்கள், பெருங் கூட்டம் கூட்டமாக வழிச்சிரமத்தையும், பொருட் செலவையும் கவனியாமல், அய்யன் கோவிலையடைந்து, அவரை அன்புப் பெருகப் பூசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று இன்பம் எய்துகின்றனர்.

முக்கியமாக வெள்ளி, திங்கட்கிழமைகளில் அய்யனைப் பூசிக்க வரும் அடியார் கூட்டம் அபரிமிதம்.

இவ்வளவே வாழைத்தோட்டத்து அய்யன் வரலாறும் மகிமைகளும் இப்பொழுது யானறிந்தவை. நலம்! நலம்!! நலம்.

ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன் திருவடி வாழ்க.

முற்றிற்று.

# அநுபந்தம்

சிவதல யாத்திரை வாசிகளும், அறிஞர்களும், அன்பர்களும், நவ நாகரீகர்களும் தெளிவாக இத்தலத்து விளங்கும் ஆலய விவரம், அமைப்பு, தோற்றம், தங்குமிடம், சுகாதாரம், தண்ணீர் வசதி, விளக்கு, விசேடம் முதலியவற்றை அறிந்துகொள்ளும்பொருட்டு இதன்கீழ் சுருக்கமாக விளக்கியுள்ளேன். அவை வருமாறு:—


## 1. கோவிலின் தோற்றம்

வளம் மிகச் சிறந்த "வாழைத் தோட்டத்து அய்யன்" ஆலயத்திற்கு நேரில் எதிரிலுள்ள மணல் மேடையினின்றும், யாத்ரீகர்கள் கவனித்தால், அவர்கள் கண்களுக்குத் தெற்கில் சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள, பெத்தாமச்சிப்பாளையத்தின் நடுவில் உயர்ந்த கோபுரத்துடன் கம்பீரமாய் விளங்கும் விநாயகர் கோவிலும், வடக்கில் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திலுள்ள அய்யன்பாளையத்து தெற்குக் கோடியில் நடை வழியையொட்டி கோபுர முகப்புடன் திகழும் "சிந்தாமணி விநாயகர்" கோவிலும், கோபுரங்களுடன் கூடிய இவ்விரு கோவில்களுக்கும் நடுவில் நாயகமாக அய்யன் கோவில் காம்பவுண்டிற்குள் "சித்தி விநாயகர்" திருக்கோவில் அழகு பெற்றுப் பொலிவது தென்படும். ஒரே சமயத்தில் பிரணவ மூர்த்தியாகிய மூன்று விநாயகர் கோவில்களும் உயர்ந்த கோபுரங்களுடன் ஒரு வரிசையில் கண் விருந்தாய் விளங்கும் காட்சி, மனதிற்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. எத்தலத்திலும் காண முடியாத கோபுரங்களுடன் கூடிய மூன்று விநாயகர் கோவில்கள் இத்தலத்தில் மட்டும் விளங்குவது அதிசயிக்கத்தக்கது.


## 2. சேந்து கிணர், தண்ணீர் டாங்கி, கால் நடைத் தண்ணீர் தொட்டி

மணல் ஓடையையொட்டி தென் வடலாக நீளமாகக் காணும் திருக்கோவிலின் முன் முகப்புத் திருமதிற்சுவற்றை சேர்த்து உயரமான நான்கு கால்கள் நிறுத்தி, சிறிய தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டு அதனடியில் ஆலயத்திற்கு வரும் அன்பர்கள் கை கால்கள் சுத்தி செய்துகொள்வதற்காக நான்கு தண்ணீர் குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இத்தொட்டியை அடுத்து சிறிய சேந்து கிணறும், கால்நடைத் தண்ணீர்த் தொட்டியும் இருக்கின்றன.

இந்த சேந்து கிணற்றில் 'எலெக்ட்ரிக் பம்பு செட்டு' வைக்கப்பட்டு அருகிலுள்ள தண்ணீர் தொட்டி, கால்நடைத் தொட்டி, புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் ஸ்நான கட்டங்களுக்குத் தேவையான தண்ணீர் இரு 'டாங்கி'கள் மூலம் சப்ளை செய்யப்படுகிறது.



தேவஸ்தான முன் மண்டபம்



தேவஸ்தான உண்டியல் பெட்டி

### 3. செங்கற் குதிரை உருவங்கள்

அய்யன் ஆலயத்திற்கு எதிரில் சுமார் பத்து அடி உயரத்தில் வெண்ணிற வர்ணம் பூசப்பட்டக் குதிரையொன்றும், செந்நிறம் பூசப்பட்ட குதிரையொன்றுமாக இரு செங்கற் குதிரைகள் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன.

### 4. ஹரிஜன விடுதியும் வசதியும்

ஆலயப் பிரவேசக் காலத்திற்குமுன் சுமார் மூன்று அங்கண அளவில் ஹரிஜன பக்தர்கள் தங்குவதற்கென்று கட்டப்பட்ட ஒரு சிறிய சாவடியும், தண்ணீர்க் குழாயும், மின்சார விளக்குகளுடன் அமைந்துள்ளது.

### 5. திருவாயில் முன் மண்டபம்

சுவாமி சன்னதிக்கு நேராக அமைந்துள்ள இச்சிறு மண்டபம் பொள்ளாச்சி வியாபார அன்பர் ஒருவரால் உபயமாகக் கட்டப்பட்டது. இதைச் சுற்றிலும் இரும்புக் கிராதிகள் போடப்பட்டு, முன்புறம் இரு பெருங்கதவுகள் இணைக்கப்பட்டிருக்கிறது. கீழே சிமெண்டு கான்கிரீட் தளம் போடப்பட்டு, போதிய மின்சார விளக்குகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. சுவாமி சன்னதிக்கு நேராக இம் மண்டபத்தில் கற்சிலையில் நந்தி உருவமும், பலிபீடமும் இருக்கின்றது. இதன் மத்தியில் அய்யன் சன்னதிக்கு நேரில் பக்தர்கள் காணிக்கை போடுவதற்காக பெரிய இரும்புப்பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இதன் வடபுறத்து மூலையில் ஒரு சிறு இரும்பு உண்டியல் பெட்டியும் வைக்கப்பட்டுள்ளது.

### 6. திருநிலை மண்டபம்

முன் மண்டபத்தை யொட்டியுள்ளதே "திரு நிலை மண்டபம்." அய்யன் ஆலயத்துள் செல்லும் வழியின் இருமருங்கிலும் அன்பர்கள் இளைப்பாற இரு திண்ணைகள் நன்கு நயஞ் செய்யப்பட்டுள்ள கற்களினால் தளம் செய்யப்பட்டிருக்கிறது.

### 7. சித்தி விநாயகர் கோவில்

திரு நிலை மண்டபத்தையடுத்து தென்புறத்திலிருக்கும் இக்கோவில் கருப்பக்கிருகத்திற்கு விமானம் எடுக்கப்பட்டு பற்பல சித்திர உருவங்களும், நான்கு மூலைகளில் நந்தி உருவங்கள் அழகுபெறச் சித்தரித்து வைக்கப்பட்டிருக்கிறது.

## 8. தேவஸ்தான காரியாலயம்

சித்தி விநாயகர் கோவிலுக்கு தெற்கே சுமார் பத்து கஜ தூரத்தில் புதிதாக அமைந்துள்ளதே, தேவஸ்தான காரியாலயம். இது தற்கால நவ நாகரீக முறையில் அழகாகவும், காற்றோட்ட வசதிகள் உள்ளதாயும், போதிய மின்சார விளக்குகளுடனும் ஒழுங்காக அமைக்கப் பட்டுள்ளது.

## 9. அய்யன் கோவில் கருப்பக்கிருகம்

திருநிலை மண்டபத்தின் திருவாயிலுள் நுழைந்து சென்றால் நேர் எதிரில் விளங்குவதே "வாழைத் தோட்டத்து அய்யன்" கோவில் கர்பக் கிருகம். இதன் சுற்று மதிற் சுவர்கள் செங்கற் கட்டிடம். மேற் கூரை நெருக்கமாக மூங்கில்களை வரிசைப்பட அடுக்கி, கயிறுகளைக்கொண்டு, இறுக்கிக் கட்டப்பட்டிருக்கிறது. அடித்தளம் சதுரமான கடப்பைக் கற்களால் பரப்பப்பட்டிருக்கிறது.

மூலஸ்தானத்தின் நடுவில் சிறந்து விளங்கும் கிளுவை மரத்தின் கீழேயே அய்யன் அவர்கள் பண்ணையாள் கனவில் தோன்றி விளக்கிய சுயம்பு லிங்கக் கற்சிலையும், நந்தி உருவச் சிலையும் பிரதிட்டிக்கப் பெற்றிருக்கிறது. கிளுவை மரத்தைச் சுற்றி கிளைகளில் வெங்கல மணிகள் பல தொங்கவிடப்பட்டுள்ளன. அதனையடுத்து சர விளக்குகளும், தூண்டா விளக்குகளும் மாட்டப்பட்டிருக்கின்றன.

கிளுவை மரத்திற்குக் கீழே சிறிது தென்புறமாய் நான்கு அடி ஆழ முள்ள மண் புற்று வளர்ந்திருக்கிறது. அப்புற்றிலுள்ள மருந்தாகிய மண் தான் சர்வ விஷங்களையும், வியாதிகளையும் திரேகத்தில் பூசினவுடன் போக்கடிக்கும் மகத்துவம் பெற்றது. இவ்உண்மையை பல்லாயிர மக்கள் நேரில் கண்டறிந்திருக்கின்றனர். இக்கலியிலும் இது ஒரு அற்புத மகிமையாக விளங்குவது அதிசயிக்கத்தக்கது.

மூலஸ்தானத்திற்கு முன்னர் அமைந்துள்ள மண்டபத்தின் தென் கோடியில் இருபத்தைந்தடி நீளமுள்ள திண்ணையொன்று இருக்கிறது. அதன்மீது கற்களில் கடையப்பட்ட நாகப்பாம்பு உருவங்கள் சில வைக்கப் பட்டுள்ளன.

திருநிலை மண்டபத்தையடுத்துள்ள தென்புற திண்ணையில் அய்யனது நினைவாகக் கோயில்கொள்ளச் செய்திருக்கும் உருவச்சிலையும், அழகுபெற விளங்கும் பிரபாவளியுடன் அமைக்கப்பெற்றுள்ளது.

### 10. திருமதில் சுற்றுப் பிரகாரம்

மூலஸ்தானத்தின் வடபாகத்து மதிலின் பிரகாரத்தில் கற்பீடம் ஒன்றமைத்து, அதன்மீது இரட்டைப் பிள்ளையார் உருவங்களும், நாகர் சிலைகளும் நிறுவப்பட்டிருக்கின்றன.

### 11. தீர்த்தக் கிணறும், அரசமரத்துப் பிள்ளையார் மேடையும்

அய்யன் கோவில் வடபுறத்து பிரகாரத்துத் திருமதிலையொட்டியிருப்பதே தீர்த்தக்கிணறு. கிணற்றுள் இறங்கி குளிப்பதற்கேற்பப் படிக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. தோட்டத்துப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு மூன்று துலையேற்றங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

தீர்த்தக் கிணற்றிற்கு நேர் மேற்கில் மேட்டில் உயர்ந்து நிற்கும் மேடைமீது அரசடி விநாயகர் கோவில் கொண்டிருக்கின்றனர்.

### 12. பவர் ஹவுஸ்

விநாயகர் மேடையை அடுத்துள்ளதே 'எலெக்ட்ரிக் பவர் ஹவுஸ்.' கோவில், சத்திரங்கள், இதர கட்டிடங்கள் அனைத்திற்கும் தேவையான தண்ணீர் இறைப்பதற்கும் அவசியமான மின்சார சக்தி உற்பத்தி செய்ய 'எஞ்சின்—டைனமோ செட்' ஒன்று இங்கு புதியதாக வாங்கி அமைக்கப்பட்டிருக்கிறது.

### 13. விஷக்கடி நோயினர் தங்கும் விடுதி

இதுதான் முதன் முதல் யாத்ரீகர்களும், விஷக்கடி நோயாளர்களும் தங்குவதற்கு நன்றாகவும், விஸ்தாரமாகவும், பலமாகவும் கட்டப்பட்ட சாவடியாகும். இவ்விடுதி 100 அடி நீளமும் 50 அடி அகலமுமுள்ளது. இரு பக்கத்திலும் திண்ணைகளும், நான்கு மூலைகளில் நான்கு அறைகளும், இருபுறம் வாசலும் கொண்டது.

### 14. யாத்திரை வாசிகள் தங்கும் நாகரீகமான விஸ்தார விடுதி

இப் பெரும் விடுதி 'வாழைத் தோட்டத்து அய்யன்' மகிமையறிந்து பக்தகோடிகள் அளவிலதிகம் வரத்தொடங்கவே, அவர்கள் தங்குவதற்கு இடம் போதாதென்பதை நன்குணர்ந்த தேவஸ்தான அதிகாரிகளால் பத்தாண்டுகளுக்கு முன் நாகரிகமாகவும், சுகாதாரத்திற்கேற்பவும், விஸ்தாரமாகவும் அரண்மனையேபோல் தோன்றும்படி கட்டப்பட்டுள்ளது.

இதன் நீளம் 170 அடி, அகலம் 72. இது பெரிய தூண்களுடனும், ஜன்னல்களுடனும், மின்சார விளக்குகளுடனும் அழகுபெற விளங்குகிறது. நோயாளிகள் விடுதியையும், இவ்விடுதியையும் ஐந்தடி அகலமுள்ள

கூடமொன்று இணைக்கிறது. இக்கூடத்தின் தெற்கே ஒரு சிறு வாசலும், வடக்கே ஒரு பெரிய வாசலுமிருக்கின்றன. இவ் விடுதியின் வெளிப் புறத்தில் ஐந்தடி அகலமுள்ள திண்ணையிருக்கிறது. பக்தர்கள் சௌகர்யத்திற்காக, இங்கும் ஏராளமான மின்சார விளக்குகள் போடப் பட்டுள்ளன.

இந்த விடுதியின் நான்கு மூலைகளில் நான்கு அறைகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. தென் பகுதியிலுள்ள வாசலில் மாடிக்குச் செல்ல படிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கிறது.

## 15. குளிக்கும் அறைகள்

இவ்வறைகள் ஆண், பெண் ஆகிய இருபாலர்க்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டு, போதிய தண்ணீர் குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. குளிப்பதற்கு மிகவும் வசதியுள்ளன. மின்சார விளக்குகளும் போடப் பட்டுள்ளன.

## 16. பொங்கற் சாவடி

குளிக்கும் அறையை அடுத்து மிகவும் வசதியான முறையில் பொங்கல் வைக்கத் தகுதியாக இச்சாவடி அமைந்துள்ளது.

## 17. புதிய சாவடி


பக்த கோடிகளின் வரவு கணக்கிலடங்காது பெருகவே, மீண்டும் தக்க வசதிகளுடன் மற்றுமொரு புதிய சாவடியும் சமீபத்தில் கட்டப்பட்டுள்ளது.

## 18. வாடகை விடுதிகள்

புதிய சாவடிக்கும், யாத்ரீகர்கள் தங்கும் நாகரீகச் சாவடிக்குமிடையில் வாடகை விடுதிகள் அமைந்துள்ளன. அதில் குடும்பத்தினர் தங்குவதற்கு வேண்டிய பல சௌகர்யங்களுடன், மின்சார விளக்கும் அமைக்கப்பட் டிருக்கிறது. இதற்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வாடகை வசூலிக்கப்படுகிறது.

## 19. வாழைத் தோட்டமும் நந்தவனமும்


பெரிய சத்திரத்திற்குச் சேர்ந்தாற்போல் வடக்கிலும், 'பவர் ஹவுஸை' யொட்டி ஒரு வாழைத் தோட்டமும், அய்யனுக்கும், ஆண்டவனுக்கும் மலர் மாலைகள் சாத்துவதற்கு பூச்செடிகள் நிரம்பிய நந்தவனமும் வைத்து நன்ருக வளர்க்கப்பட்டு வருகின்றது.



தேவஸ்தான புது சத்திரம்



தேவஸ்தான கடை



தேவஸ்தான சாவடி

கோவிலைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் அமைந்துள்ள நிலப் பரப்புகள், யாத்ரீகர்களது வண்டி மாடுகள் தங்குவதற்கு வசதியானவை.

## 20. சில்லரைக் கடைகள்

அய்யன் கோவிலுக்குத் தென் பகுதியில் வியாதியஸ்தர்கள் விடுதியின் முன் வாசலில் பூஜா திரவியங்கள், சமையல் சாமான்கள் விற்கப்படும் நிரந்தரமான சில்லரைக் கடைகள் சேவார்த்திகளின் சௌகர்யத்தை முன்னிட்டு தேவஸ்தானத்தாரால் வைக்கப்பட்டிருக்கின்றன. கடைகளில் சாமான்கள் வாங்குகிறவர்களுக்குச் சமைப்பதற்கு வேண்டிய பாத்திரங்கள் இலவசமாகக் கொடுக்கப்படும். விறகு, பால், தயிர், காய்கறி முதலியனவும் விலைக்குக் கிடைக்கும். யாத்ரீகர்களின் சௌகர்யத்தை முன்னிட்டு ரூ. 20,000/- செலவில் புதிதாக ஹோட்டல் கட்டிடம் கட்டப் பட்டிருக்கிறது.

## 21. நித்திய பூஜையும் நிவேதனங்களும்

நாள்தோறும் காலையில் பச்சரிசி பொங்கலிட்டு, அமுதுபடைத்து அபிஷேக பூசையும், நடுப்பகலிலும் மாலையிலும் தேங்காய், பழங்கள், நாட்டுச் சர்க்கரை படைத்து, சாதாரண நிமித்திய பூசையும், இரவில் அமுது படைத்து, தேங்காய் பழங்கள் படைத்து நிமித்திய பூசையும், ஆக நான்கு பூசைகள் முறையே காலை 6 மணிக்கும், நடுப்பகல் 12 மணிக்கும், மாலை 5 மணிக்கும், இரவு 8 மணிக்குமாகத் தவறாமல் காலக்கிரமப்படி நடந்துவருகிறது.

மற்றைய நேரங்களில் சுவாமி தரிசனைக்கு வரும் அன்பர்கள் பூசாரிகளின் உதவியின்றித் தாமாகவே பூசைகள் செய்துகொள்ளும் உரிமை மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது மிகவும் போற்றத்தக்க விஷயமாகும்.

## 22. விழாக்கள்

ஆண்டுக்கு ஒரு முறை மார்கழி மாதம் வளர் பிறைக் காலத்தில் திருவாதிரை உற்சவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. அக்காலத்தில் விசேஷ ஆலய ஜோடனைகளும், வாத்தியம், சிவ பஜனை, தேவார திருமுறை ஓதல், சுவாமி வாகனங்களில் பவனி வருதல் முதலியவற்றை தேவஸ்தான செயலாளர்கள் சிறப்பாக செய்விக்கின்றனர். இவ்விழாவை முன்னிட்டு ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டு வந்ததை, தற்கால உலக உணவு நெருக்கடியின் காரணமாக தற்காலீகமாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வுற்சவத்தைக் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து கூடுகின்றனர்.

## 23. மாதாந்திர உற்சவங்கள்

சாதாரண விழாவாக நடத்தப்பட்டுவரும் மாதாந்திர உற்சவங்களின் விபரம் பின்வருமாறு:—

(1) ஆடி அமாவாசை. (2) ஆடி 18. (3) விநாயக சதுர்த்தி. (4) மஹாளய அமாவாசை. (5) ஆயுத பூஜை. (6) தீபாவளி பண்டிகை. (7) கந்தர் சஷ்டி. (8) கிருத்திகைதீபம் (9) தைப்பூசம் (10) மகா சிவராத்திரி. (11) பங்குனி உத்திரம். (12) யுகாதி பண்டிகை. (13) தமிழ் வருஷப் பிறப்பு. (14) நால்வர் பூஜை. (15) மாதாந்திரக் கிருத்திகை.

## 24. வருவாயும் சொத்தும்

அய்யன் கோவிலுக்குச் சொந்தமான 6 ஏகர் பூமியுள்பட, பல்வகை ஜங்கம ஸ்தாவர சொத்துக்களும் சேர்ந்து சுமார் 75,000/- ரூபாய்கள் மதிப்பிற்குரியது.

1350, '51, '52-ம் பசலிகளில் சராசரி வருமானம் 11,000/- ரூபாய்கள். 1353, 54, 55-ம் பசலிகளில் சராசரி வருமானம் 25,000/- ரூபாய்கள். 1356-ம் பசலியில் சுமார் 40,000/- முதல் 50,000/- ரூபாய்கள் வரை அய்யன் கோவிலில் வருமானம் வந்துள்ளது. இவைகள் யாவும் பக்தர்களால் பிரார்த்தனைக் காணிக்கைகளாகவும், நில வரும்படி, வட்டிகள், கடை, முடி கண்டிராக்டுகள் ஆகிய பல வகையில் கிடைத்ததாகும்.

## 25. தர்மகர்த்தாக்களும், மானேஜர்களும், நிர்வாகமும்

சென்னை இந்து மத தர்ம பரிபாலன கழகத்திற்கு ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் தேவஸ்தானம் 1929-ம் ஆண்டு உள்ளாயிற்று.

சென்னை இந்து மத தர்ம பரிபாலன கழகத்தார் 17—10—1942-ந் தேதியில் பிறப்பித்த B. O. No. 1481 உத்தரவின் நிர்ணயத்தை அனுசரித்து, ஏற்படுத்தப்பட்ட தேர்தல் விதிகளின் பிரகாரம் கோவில் வார்சுதாரர்களுக்குள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்று டிரஸ்டிகள் (தர்மகர்த்தாக்கள்) தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டும், அவர்களுள் ஒவ்வொரு பசலிக்கும் 'மானேஜிங் டிரஸ்டி' தேர்தல் செய்துகொண்டும், கழகத்தாரால் நியமிக்கப்படும் மானேஜரை வைத்து கொண்டு, இதர டிரஸ்டிகளை முக்கியமான விஷயங்களில் கலந்துக்கொண்டும் கோவில் நிர்வாகம் மானேஜிங் டிரஸ்டியின் நிர்வாகப் பொருப்பில் கவனிக்கப்பட்டு வந்தது.

சென்னை இந்து மத தர்ம பரிபாலன கழகத்தாரவர்கள் 2–12–1942-ந் தேதி உத்தரவின் நிர்ணயப் பிரகாரம் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். அய்யன் கோவிலில் பூசை செய்வதற்காக மாதாந்திர சம்பளத்தில் மூன்று பண்டாரங்களும், இதர ஊழியங்கள் செய்வதற்காக நான்கு சேவகர்களும், ஒரு வண்டிக்காரனும், 'பவர் ஹவுஸ்' வேலைகளைக் கவனிக்க ஒரு எலக்ட்ரீஷியனும், நான்கு குப்பைக் கூட்டிகளும், சென்னை கழகத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் கோவில் நிர்வாக அதிகாரி (எக்ஸிகியூடிவ் ஆபீஸர்) அவர்கள் தலைமையின்கீழ் வேலை செய்து வருகின்றனர். மேலும் நிர்வாக அதிகாரி அவர்கள், தமக்கு உதவியாக ஒரு குமாஸ்தாவையும், ஒரு 'மணியம் ஸ்டோர் கீப்பரையும்' அமர்த்திக் கொண்டு, தேவஸ்தான காரியாலய அலுவல்களை கவனித்து வருகிறார்.

ஸ்ரீ வாழைத் தோட்டம்,
அய்யன் தேவஸ்தானம்,
அய்யம்பாளையம்.

**S. D. வெங்கட்ராம நாயுடு,**
நிர்வாக அதிகாரி.

# கோவில் சிப்பந்திகளுக்கு ஊழிய மான்யம், பரம்பரை பாத்யதைகள் கிடையாது.

26. முன்பு இருந்த டிரஸ்டிகள்

I 1929 டிசம்பர் முதல் 1933 பிப்ரவரி வரை.

| | |
|---|---|
| து. மாரப்பக் கவுண்டர், | மானேஜிங் டிரஸ்டி. |
| து. துருசாமிக் கவுண்டர், வாரக்காட்டு ராமக் கவுண்டர், | டிரஸ்டிகள். |

II 1—12—32 முதல் 29—1—38 வரை.

| | |
|---|---|
| R. S. துருசாமிக் கவுண்டர், | மானேஜிங் டிரஸ்டி. |
| சிவ கணபதிக் கவுண்டர், து. துருசாமிக் கவுண்டர், | டிரஸ்டிகள். |

III 30—1—1938 முதல்.

| | |
|---|---|
| சின்னகிணத்து துருசாமிக் கவுண்டர், | மானேஜிங் டிரஸ்டி. |
| தெற்குபொளி மாரப்பக் கவுண்டர், பச்சாங்காட்டு சின்னையக் கவுண்டர், | டிரஸ்டிகள். |

இண்டரிம் டிரஸ்டிகள்

1. 24—2—41 to 2—3—41 S. முருகையன், B. A., இன்ஸ்பெக்டர், H. R. E. ஈரோடு டிவிஷன்.

2. 3—3—41 to 24—7—41 V. ஸ்ரீனிவாச பிள்ளை, இன்ஸ்பெக்டர், H. R. E. ஈரோடு டிவிஷன்.

3. 29—7—41 to 16—1—42 M. G. மேனன், B. A., இன்ஸ்பெக்டர், H. R. E. ஈரோடு டிவிஷன்.

4. T. S. ரங்காச்சாரி, B. A., இன்ஸ்பெக்டர், H. R. E. ஈரோடு டிவிஷன்.